உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்தொன்பதாந் தொகுதி.

Volume 49.

நந்தன—விஜய ௵

1952–1953

பத்திராசிரியர் — திரு, நா. அப்பனையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

சகூ-ஆம் தொகுதியின் உள்ளுறை

கட்டுரையின் பெயர்.	எழுதியவர் பெயர்.	கட்டுரை தொடங்கும் பக்கம்.
ஆக்ஸிஜன்:—	திரு. பெ. நா. அப்புஸ்வாமிஐயர் அவர்கள் B. A. B. L.	க0க
ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—		கசுரு
இசைப்பயன்:—	சங்கீதபூஷணம் திரு. க. முத்துக்குமாரசாமி அவர்கள்	ருஅ
இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை	திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள், B. A., B. L.	சுஎ, கஉரு, உ௪க.
கம்பரும் துளஸிதாஸரும்	திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M.A.	உரு, ருசு, உசஅ.
கலிங்கத்துப் பரணியில் நகைச்சுவை	திரு. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள், B. A., B. L.	உஎரு
கலித்தொகையில் நகைச்சுவை	திரு. R. வீரபத்திரன் அவர்கள் M. A.	கக
கார்பன்—டை—ஆக்ஸைடு	திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள் B. A., B. L.	கசஎ
சக்கரம்:—	ஷை	உருஅ
சங்ககால மன்னர்கள்	வித்துவான் திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள் M. A.	க, சுக, கக, கஉசு, ககரு, உ0க, உசச, உசுரு.
சிலப்பதிகாரம்: உரைபெறுகட்டுரை	பத்திராசிரியர் திரு நா. அப்பனையங்கார்	சஅ
தமிழ்மொழி:—	திரு. இராமசுப்பிரமணியநாவலரவர்கள்	கஅ, எஎ.
தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—		உஅஉ
திருத:—	திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B. A., B. L.	உசுக

திருவள்ளுவர் திருநாள்	பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் M.A., B.O.L.	௪௨
தொல்காப்பியமும் தொனிகாவியமும்	திரு. K. S. விசுவநாத சாஸ்திரி அவர்கள்	௮௩
நாலடியார் திருத்தவுரை	திரு. பண்டித-சத்தியவாகீசுவர ஐயரவர்கள்	௧௫௧
நைட்டிராஜன்:—	திரு. யெ. கா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B. A., B. L.	௧௧௪
பண்டைக் கேரளத்தில் கூத்தும் இசையும்	திரு. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள், B.A., B.L.	௧௬௧
பரிபாடலும் நகைச்சுவையும்:—	௸	௸	௨௩௩
பவபூதி-இராமன்:—	திரு. N. S. தாத்தாச்சாரியர் அவர்கள்	௩௪
மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்கள்	திரு. வி. சீ. கந்தையா அவர்கள்	௨௧௫
மதிப்புரை:—	பத்திராசிரியர்	௨௩, ௭௫, ௨௬௨.
மொழி பெயர்த்தல்	பண்டிதர். திரு. F. X. C. நடராசா அவர்கள்.	௧௭௭
வளருந் தமிழ்	வித்துவான் பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் M.A., B.O.L.	௧௩௧
வாயுமண்டலத்திலுள்ள அரியவாயுக்கள்:—	திரு. யெ. கா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B. A., B. L.	௧௫௩

செந்தமிழ் சுகூ-ஆம் தொகுதிக்குப் பொருளுரைவழங்கியோர்பெயரும் பொருளுரைகளின்பெயரும் பக்கமும்.

திரு. நா. அப்பணையங்கார், பத்திராசிரியர்.

சிலப்பதிகாரம்: உரைபெறுகட்டுரை சங

மதிப்புரை உங, எரு, உசுஉ.

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B. A., B. L. அடையாறு.

ஆக்ஸிஜன் க0க

கார்பன்-டை-ஆக்ஸைடு கசஎ

சக்கரம் உருசு

திருகு உசுக

கைட்டிராஜன் ககச

வாயுமண்டலத்திலுள்ள அரியவாயுக்கள் கருங

திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், M. A., B. O. L. கொழும்பு.

திருவள்ளுவர் திருநாள் சஉ

வளரும் தமிழ் கஅகூ

திரு. பண்டிதர், இராமசுப்பிரமணியநாவலவரவர்கள், தக்கலை.

தமிழ்மொழி கங, எஎ.

திரு. வி. சீ. கந்தையா அவர்கள், கொழும்பு.

மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்கள் உகரு

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B. A., B. L. மதுரை.

இராமாவதாரத் தனிச்செய்யுளுரை கூஎ, கஉரு, உகக.

திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M, A., B. O. L. மயிலம்.

சங்ககாலமன்னர்கள் க, சகூ, ககக, கஉகூ, ககூரு, உ0க, உசச. உகூரு.

திரு. சத்தியவாகீசுவரஐயரவர்கள், திருவநந்தபுரம்.

நாலடியார் திருத்தவுரை கருக

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A. மதுரை.
கம்பரும் துளஸிதாஸரும் ௨௫, ௫௧, ௨௪௮.

திரு. N. S. தாத்தாச்சாரியர் அவர்கள், சிரோமணி, தஞ்சை.
பவபூதி—இராமன் ௯௭

திரு. பண்டிதர், F. X. C. நடராசாஅவர்கள், மட்டுநகர், கொழும்பு.
மொழிபெயர்த்தல் ௧௦

திரு. க. முத்துக்குமாரசாமி அவர்கள், சங்கீதபூஷணம், வராகூர், சிதம்பரம்.
இசைப்பயன் ௫௯

திரு. வித்துவான், K. S. விசுவநாத சாஸ்திரி அவர்கள், P. O. L. திருப்பதி.
தொல்காப்பியமும் தொனிகாவியமும் ௮௯

திரு. R. வீரபத்திரன் அவர்கள், M. A. திருவநந்தபுரம்.
கலித்தொகையில் நகைச்சுவை ௯௯

திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B. A., B. L. திருவநந்தபுரம்
பண்டைக் கேரளத்தில் கூத்தும் இசையும் ௧௬௯
பரிபாடலும் நகைச்சுவையும் ௨௯௯
கலிங்கத்துப்பரணியில் நகைச்சுவை ௨௭௫

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி—சக.] நந்தன-ஹு கார்த்திகை—மார்கழிமீ [பகுதி க-உ.

Vol. 49. November 1952—January 1953 No. 1-2.

உ

சங்ககால மன்னர்கள்

(48-வது தொகுதி 264-வது பக்கத்தொடர்ச்சி)

வித்துவான், கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A. விரிவுரையாளர்
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

பெருஞ்சேரலாதன்

அந்துவன் சேரலிரும்பொறை, உதியன் சேரலாதன், பெருஞ்சேரலாதன் ஆகிய மூவரும் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கு முந்தியவர்கள். இவர்கள் சமகாலத்தவர் என்பர். குடக்கோ நெடுஞ்சேரலாதனும், பெருஞ்சேரலாதனும் ஒருவரே என்பர் ஒரு சாரார். குடக்கோ நெடுஞ்சேரலாதன் போர்க்களத்தே உயிர்துறந்தான் எனவும், பெருஞ்சேரலாதன் வடக்கிருந்தான் எனவும் புறநானூறு குறிப்பதனால் 'இருவரும் ஒருவராகார்; இரு வேறு மன்னர்களே' என்பது உறுதிப்படும்.

குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்குத் தந்தை உதியன் சேரலாதன் எனப் பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்துப் பதிகம் கூறுகிறது. கழாத்தலையார் மாத்திரம் பெருஞ்சேரலாதனைப்பற்றிக் கையறுநிலை பாடியிருக்க, குடக்கோநெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்க்களத்தே பொருது வீழ்ந்து

*

கிடந்த செய்தியைக் கழாத்தலையாரும், பரணரும் பாடியிருக்கிறார்கள். பரணருக்குச் சமகாலத்தவரான கழாத்தலையார் பரணருக்கு முந்தியும் வாழ்ந்தவராதல் வேண்டும் என்பது கபிலரது பாட்டால் புலனும். (புறம். 202) ஆதலின் குடக்கோநெடுஞ்சேரலாதனுக்கு முந்தியவராதலின், உதியன்சேரலாதனும், பெருஞ்சேரலாதனும் ஒருவரே என்பர். உதியனைப் பெருஞ்சேரலாதன் என்றோ, பெருஞ்சேரலாதனை உதியன் என்றோ எப்புலவரும் குறிக்கவில்லை. உதியன் பாரதப்போரில் பெருஞ்சோறளித்தவன் எனக் குறிக்கப்படுகிறான். ஆதலின், இருவரும் காலத்தால் வேறுபட்டவராவர். பரணரும் கழாத்தலையாரும் சமகாலப் புலவர்களாதலின், பெருஞ்சேரலாதனும் நெடுஞ்சேரலாதனும் சமகாலத்தவராவரோ என ஐயுறவும் இடனுண்டு. செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர் சேரலாதன் எனக்குறிக்கின்றார். (புறம் 8) ஆதலின், பெருஞ்சேரலாதன் இச் செல்வக்கடுங்கோவாகலாம் எனக்கருத இடனுண்டு.

பரணரும் கழாத்தலையாரும் நெடுஞ்சேரலாதனைப்பாடிய புலவர்களாதலால், பெருஞ்சேரலாதனை வென்ற கரிகாலன், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கு முந்தியவன். பெருஞ்சேரலாதனும் அந்துவன்சேரலும் சமகாலத்தவராகவோ, ஒருவர்பின் ஒருவராக நாடு ஆண்டவர்களாகவோ ஆதல்வேண்டும். ஆதலின் கரிகாலனும் பெருவிறற்கிள்ளியும் சமகாலத்தவராகவோ ஒருவர்பின் ஒருவராக நாடாண்டவர்களாகவோ ஆதல் வேண்டும். வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியின் தந்தை இக்கரிகாலன் எனக் குறிக்கின்றார் திரு. சிவராஜப்பிள்ளை அவர்கள். திரு. மு. இராகவையங்கார் அவர்களும் இக்கொள்கையினரே.

வழுதியும் செழியனும்

கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியைப் பாடிய புலவர்கள் ஐயூர் மூலங்கிழார், கடுவன் இளமள்ளனார், ஔவையார் ஆவர். வேங்கைமார்பனுக்குரிய கானப்பேரெயிலைக் கைப்பற்றிய

வெற்றியைக் குறிக்கின்றார் ஐயூர்மூலங்கிழார். (புறம் 21.) அவ் வெற்றியையே சிறப்பித்து அகப்பொருட்டுறையில் உவமையாக்கி உரைக்கின்றார் (நற் 150.) கடுவன் இளமள்ளனார். சேரமான்மாரி வெண்கோவும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்குசூழ வீற்றிருந்த பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதியை வாழ்த்துகின்றார் ஔவையார். இப்புலவர்களுள் முன்னவர் இருவரும் பிறமன்னர்களைப் பாடவில்லை. ஔவையார் அதிகமான் நெடுமான் அஞ்சியையும், அவன்மகன் எழினியையும், நாஞ்சில்வள்ளுவனையும், பசும்பூட்பொறையனையும், கிள்ளியையும் போற்றுகின்றார். நாஞ்சில்வள்ளுவனை ஒருசிறைப்பெரியனார் 'சிறுவெள்ளருவிப் பெருங்கல்நாடன்' எனக்குறிக்கின்றார். கதப்பிள்ளையார் 'தென்னவர் வயமறவன்' எனவும், 'தீஞ்சுளைப்பலவின் நாஞ்சிற்பொருநன்' எனவும், 'வல்வேல் கந்தன்' எனவும் குறிக்கின்றார். (புறம் 380.) மருதனிளநாகனார் 'வேந்தர்க்குச் சாதல் அஞ்சான்' எனவும், 'கிளிமரீஇய வியன்புனத்து மரனணி பெருங்குரலனையன்' எனவும் (புறம் 138, 139.) கூறுகின்றார். பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதியையும், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனையும், போற்றுகின்றார் மருதன் இளநாகனார்.

ஔவையாரது காலத்தே வாழ்ந்த பரணர், பசும்பூண்பாண்டியன் என ஒருவரைக் குறிக்கின்றார். (அகம் 162, குறுங் 393) ஈழத்துப்பூதன் தேவனார், நக்கீரர், மதுரைக்கணக்காயனார் ஆகியவரும் பசும்பூண்பாண்டியனைக் குறிக்கின்றனர். (அகம் 231, 253, 338.) இவர்களுள் நக்கீரர் பாடிய நெடுநல்வாடை தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக் குரியதெனக் கூறுவது வழக்கு. மதுரைக்கணக்காயனார் அப்பாண்டியனைக் குறிக்கும் (அகம். 338) பாட்டிலேயே பொறையன் ஒருவனையும், இளையர் பெருமகன் தொகுபோர்ச்சோழன் ஒருவனையும் குறித்திருக்கின்றார். இக்கணக்காயனார், "வடவயின் வேங்கடம் பயந்த வெண்கோட்டுயானை மறப்போர்ப்பாண்டியர் அறத்திற்காக்கும் கொற்கையம் பெருந்துறை".

(அகம் 27.) எனவும்; "வெல்போர்க்கௌரியர் நன்னாட்டுள்ளதை, மண்கொள் புற்றத் தருப்புழை திறப்பின், ஆகொள் மூதூர் கள்வர் பெருமகன், ஏவ லிளையர் தலைவன் மேவார், அருங்குறும் பெறிந்த ...... நல்லிசைத் தென்னன்" (அகம் 342.) எனவும் குறித்திருப் பதனால், வேங்கடநாட்டில் வாழ்ந்த கள்வர்தலைவனாகிய புல்லியை இப்பாண்டியன் வென்றவனாதல் வேண்டும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பசும்பூட் செழியன் எனக் குறித்திருக்கின்றார். (புறம் 76.) பசும்பூட்பாண்டி யன் இப் பசும்பூட்செழியனுக்குப் பாட்டன் எனக் கூறுவாரும் உளர். "யாழிசை மறுகின் நீடூர் கிழவோன் வாய்வா ளெவ்வி யேவல் மேவார், நெடுமிடல் சாய்த்த பசும்பூண்" எனக் குறிக்கின்றார் பரணர். (அகம் 266.) எவ்விக்குரிய மிழலைக்கூற்றத்தைக் கவர்ந் தனன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனக் குறிக்கின்றார் மாங்குடிமருதனார். (புறம் 24.) ஆதலின் பசும் பூண்பாண்டியனும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும் ஒருவரேயாவர் என்பது பெறப்படும். நெடுநல்வாடை இந்நெடுஞ்செழியனைப் பற்றியதெனக் கூறப்படுவதனால், பசும்பூண் பாண்டியன் கொங்கரைவென்று கூடலிலாடிய வெற்றிச்சிறப்பினைக் குறித்த நக்கீரர் பிறபாண்டியரைப் பாடாது நெடுநல்வாடை கூறி யுள்ளதைச் சிந்திக்கினும் பசும்பூண்பாண்டியனும் செழியனும் ஒருவரே என்பது போதரும். பசும்பூண்பாண்டியன் உக்கிரப்பெரு வழுதியாகான்.

நக்கீரர், சேரமான்கோதை காலத்துப் பாண்டியன் வழுதி எனக்குறிக்கின்றார். (அகம் 93.) நற்றிணை 358-ஆம் செய்யுளில் பசும்பூண்வழுதியென ஒருவரைக் குறிக்கின்றார். இவ்வழுதி கூட காரத்துத்துஞ்சிய மாறன்வழுதியாகலாம். உக்கிரப்பெருவழுதி யல்லன். ஆதலின், உக்கிரப்பெருவழுதி, நெடுஞ்செழியன், மாறன் வழுதி ஆகிய மூவரும் ஒருவர்பின் ஒருவராக அரசெய்தியவராதல் வேண்டும்.

தலையாலங்கானத்துப்போர், முசிறிப்போர் ஆகிய இரண்டையும் நக்கீரரே கூறுவதனால் இருபோர்களையும்புரிந்த நெடுஞ்செழியர்கள் ஒருவரேயாதல்வேண்டும். முசிறிமுற்றிய செழியனைத் தலையலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனுக்குப் பிற்பட்டவனாகக் கருதுதற்கு இடமில்லை.

கரிகாலன்

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பரணரும் பெருங்குன்றூர்கிழாரும் பாடியுள்ளனர். இவன் போர்புரிகையில் அழகியதேரில் பொலிந்துவிளங்கின தன்மையைப் புகழ்கிருக்கின்றார் பரணர். இவனதுமகன் கரிகாலன் என்பது பொருநாற்றுப்படையால் விளங்குவதாம்.

கழாத்தலையாரால் புகழப்பெற்ற பெருஞ்சேரலாதனை வென்றவன் காரிகாலன் என்பதும், அப்போர் நிகழ்ந்த இடம் வெண்ணி என்பதும் வெண்ணிக்குயத்தியாரது பாடலால் விளங்கும். கரிகாலனது வெண்ணிப்போரைப் பரணரும் குறிக்கின்றார். (அகம். 246). சமகாலத்தவரான இருபுலவர்களால் பாடப்பட்ட கரிகாலர்கள் ஒருவரேயாதல்வேண்டும் என்பர் ஒரு சாரார். கரிகாலன் வெண்ணியில் பெருஞ்சேரலாதன் ஒருவனோடுமாத்திரம் போர்புரிந்ததாகக் காணப்படுகிறது. அவனோடு பிறமன்னர்கள் போரில் கலந்துகொண்டதாகப் பெருஞ்சேரலாதனைப்பாடிய புலவர்களோ கரிகாலனைப்பாடிய புலவர்களோ குறிக்கவில்லை. பரணர் கரிகாலனது வெண்ணிப்போரில் வேளிரும் வேந்தரும் மாய்ந்ததாகக் குறிக்கிறார்; வேந்தர் எனப் பன்மையில் குறிக்கின்றார். ஆதலின், இருகரிகாலர்களும் ஒருவராகார் என்பது உறுதி.

கரிகால்காணப் புனல் நயந்தாடிய ஆட்டன்-அத்தியைக் கடல் கொண்டொளித்த செயலை உவமையாக அமைத்துப் பாடுகிற பரணர் அச்செய்யுளிலேயே "குரங்குளைப் புரவிக் குட்டுவன் மாந்தை" (அகம். 376) எனவும், புறம். 343-ஆம் செய்யுளில் 'பொலந்தார்க் குட்டுவன் முழங்கு கடல் முழவின் முசிறி, எனவும் குறிப்பதனால்

கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் காலத்திலேயோ இவனுக்கு முற்பட்டகாலத்திலேயோ வாழ்ந்தவனாதல்வேண்டும் கரிகாலன். கரிகாலனது செய்திகளையெல்லாம் அகப்பொருட்செய்யுட்களிலேயே அமைத்துப் பரணர் பாடியிருப்பதால் அச்செய்திகள் முந்தியவையாகவும் ஆகலாம் அன்றோ?

கரிகாலனது வீரச்செயல்களைக் குறிக்கும் நக்கீரர், கோசரை வென்ற பொலம்பூண்கிள்ளியாகிய கிள்ளிவளவனையும், சேரமான் கோதையையும் குறிக்கின்றார்; பழையன்மாறன் என்பவனால் கிள்ளிவளவன் தோல்வியுற்ற செய்தியையும் குறிக்கின்றார். (அகம். 346) ஆதலின், உக்கிரப்பெருவழுதி தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மாறன்வழுதி ஆகிய மூவர்காலத்தும் வாழ்ந்த சோழமன்னர்கள் கரிகாலன், இராஜசூயம் வேட்டபெருநற்கிள்ளி, செம்பியன், கிள்ளிவளவன் ஆவர்.

கிள்ளிவளவனும் நலங்கிள்ளியும்

(1) திரு. P. T. சீநிவாசையங்கார் அவர்களும் திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளையவர்களும் நலங்கிள்ளி கரிகாலனுக்குப்பின் சோணாடாண்டவன் என்பர். திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளையவர்கள் 'கிள்ளிவளவன் நலங்கிள்ளியின் மகன்' என்பர். திரு. சிவராஜப்பிள்ளையவர்களும் இக்கொள்கையினரே. (2) 'கிள்ளிவளவன் கரிகாலன் மகன்' என்பர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் திரு. கனகராஜையர் அவர்களும். காரணம் 'கிள்ளிவளவன் இளங்கோன் தன்னால் காரியாற்று வெற்றிகொண்டான் எனக்கூறுகிறது மணிமேகலை; ஆதலின், காரியாற்று வெற்றிகொண்ட நலங்கிள்ளி கிள்ளிவளவனுக்குத் தம்பியாதல்வேண்டும்; நலங்கிள்ளி சேட்சென்னி என வழங்கப்படுதலால் இளஞ்சேட்சென்னியின் பேரனாகலாம்' என்பதாம். திரு. கனகராஜையர் அவர்கள் திரு. சோமசுந்தரதேசிகர் எழுதிய 'பழந்தமிழ்ப்பெருமக்கள்' என்னும் நூல் தனக்குச் சான்றெனக்கூறுவர். (3) கிள்ளிவளவனும் நலங்கிள்ளியும் கரிகாலன் பேரர் என்பர் திரு. மு.

இராகவையங்கார் அவர்கள். (4) 'இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளி காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியின் மைந்தன். இதனை 125, 174-ஆம் புறப்பாட்டுக்கள் வலியுறுத்தும்' என்பர் நாட்டார் அவர்கள். அவர் திரு. மு. இராகவையங்கார் கருத்து பொருத்தமானதென்பர். இப்பலதிறப்பட்ட கொள்கைகளை ஆராய்வாம்.

மணிமேகலை சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை

"செய்நிலத் தன்றியும் செவ்வியின் வணங்கி
எஞ்சா மண்ணசை இகலுளந் துரப்ப
வஞ்சியி லிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையுந் தேரு மாவும்
மறங்கெழு நெடுவாள் வயவரு மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கய னெடுங்கொடி செருவேற் றடக்கை
ஆர்புனை தெரிய லிளங்கோன் றன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி யூழிதோ றூழி"

எனக் கூறுகிறது. இதனுள் சோழனுடைய பகைவாது கொடிகளாகச் சிலைக்கயனெடுங் கொடிகள் தான் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின், காரியாற்றுப்போரில் சோழனை(நெடுங்கிள்ளியை) க்கிள்ளிவளவன் வென்றதாகக் கூறவில்லை; இளங்கோன், நலங்கிள்ளியெனத் துணிதற்குச் சான்றில்லை. 'குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செங்குட்டுவனது மைத்துனன் (சிலம்பு 28/118—122) என்பதை மெய்யெனக்கொள்ளமுடியாது; அவன் உதயகுமாரன் தந்தை யென்பதும் உண்மையெனக் கருதல் இயலாது' என்பர் திரு. P. T. சீநிவாசையங்கார் அவர்கள்.

சிலம்பு 28/118—122 அடிகள், கிள்ளிவளவனைக் குறிப்பன எனக் கருத இடமிருக்கிறதெனக் கூறுவார் சிலராக, திரு. மு. இராகவையங்கார் அவர்கள், 'காரியாற்றுத்துஞ்சின நெடுங்கிள்ளியைச் செங்குட்டுவன் மைத்துனன்' என்பர். நெடுங்கிள்ளி, மணக்கிள்ளி

யின் மகன் என்பதற்கும்; உறையூர் மணக்கிள்ளிக்கும், புகார் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளிக்கும் தலைநகர்களாக விளங்கின என்பதற்கும் சான்றில்லை.

ஐயங்கார் அவர்கள் நெடுங்கிள்ளியும் நெடுமுடிக் கிள்ளியும் ஒருவரேயெனக் கொண்டனர்; கிள்ளிவளவனும் நெடுங்கிள்ளியும் வெவ்வேறு மன்னர்கள் என்பர். கிள்ளிவளவனை நெடுமுடிக் கிள்ளியெனக் கூறுகிறது மணிமேகலை.(ஆபுத்திரன் மணிபல்லவமடைந்தகாதை 29வது அடி). நெடுங்கிள்ளியின் தந்தை மணக்கிள்ளி என்பதைத் திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளை அவர்களும் கூறுகிறார்கள், அதற்குரியகாரணம் கூறவில்லை. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப்பற்றி அறிய இயலவில்லையென்பது அவர் கருத்தாம்.

கிள்ளிவளவன் வானவனை வென்றதாக, மாறோக்கத்து நப்பசலையார் (புறம் 39) கூறுகின்றார். அக்கிள்ளிவளவன் செம்பியன் மருகன் என அப்புலவரே கூறுகின்றார், ஆதலின் செம்பியன் கிள்ளிவளவனுக்கு முன்னர் அரசாண்டவனாதல் வேண்டும். கிள்ளிவளவனுக்கு முன்னோனாகிய செம்பியன், குட்டுவனது அகப்பாவை அழித்தனன் என மாமூலனார் கூறுகின்றார். பாலைக்கௌதமனார் பதிற்றுப்பத்தின் மூன்றாம்பத்தின் இரண்டாம்பாட்டில், "அண்ணலம் பெருங்கோட் டகப்பா எறிந்த பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ" எனக்குறிக்கின்றார். மாமூலனாரும் பாலைக்கௌதமனாரும் கூறுவதைநோக்கின், இருபுலவரும் குறிக்கும் குட்டுவன் ஒருவனேயாதல் வேண்டும் என்பது விளங்கும். இவ்விருபுலவர் கூற்றினின்றும் ஒருசெய்தியை உணர்கிறோம். அஃதாவது, 'செம்பியன் குட்டுவனது அகப்பாவை அழித்தனன்; பின்னர் குட்டுவன் செம்பியனை வென்றனன்; பின்னர் ஓர்கால் செம்பியன் மகனாகிய கிள்ளிவளவன் வானவனை வென்றனன்' என்பதேயாம். அல்லது, 'குட்டுவன் செம்பியனது அகப்பாவை அழித்தனன்; செம்பியன் பின்னர் அகப்பாவை எறிந்து வென்றனன், செம்பியன் மகனாகிய கிள்ளிவளவன் வானவனை வென்றனன்' எனவும் யூகிக்கலாம்.

ஆதலின் செம்பியனால் வெல்லப்பட்ட குட்டுவன், பாலைக்கௌதமனா ரால் பாடப்பெற்ற பல்யானைச் செல்கெழுகுட்டுவனே யாவான். செம்பியன், தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டவன். ஆதலின் செம்பியன் அந்நெடுஞ்செழியனது ஆட்சித்தொடக்கம்வரை அதாவது குட்டுவனது ஆட்சியின் பிற் பகுதியிலும் வாழ்ந்தவனாவான். நெடுஞ்சேரலாதனோடு போர்க் களத்து வீழ்ந்த வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும், உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியும், கரிகாலனும், இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருவர் பின் ஒருவர் அரசெய்தியவராதல் வேண்டும் என்பது போதரும். உற்றுநோக்கின் பிறிதொரு உண் மையும் புலனாம். பல்யானைச் செல்கெழுகுட்டுவனது அகப்பாவை எறிந்தவன் செம்பியன் என்பதனால், இக்குட்டுவனது அண்ணனா கிய நெடுஞ்சேரலாதனை வென்ற வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள் ளிக்குப் பிறகு அரசெய்தியவன் செம்பியன் என்பதும் அவனுக்குப் பின் அரசெய்தியவன் கிள்ளிவளவன் என்பதும் புலனாம். ஆதலின் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்குப் பின் சோழநாட்டினை இருவேறு சோழமரபினர் ஆண்டுவந்தனர் என்பதும் சென்னி, கரிகாலன், பெருவிறற்கிள்ளி ஆகியவர்கள் ஒருமரபினர் என்பதும் செம்பியனும் கிள்ளிவளவனும் ஒருமரபினர் என்பதும் நன்குபுல னாம். நலங்கிள்ளி, சேட்சென்னி என வழங்கப்படுவதனால் அவன் சென்னியின் மரபினனாகல்வேண்டும் என்பதும் அவன் பெருவிறற் கிள்ளிக்குப் பின்னர் அரசெய்தியவனாதல் வேண்டும் என்பதும் புலனாம். செம்பியன் கரிகாலனுக்குப் பிறகுதான் நெடுஞ்செழிய னால் வெல்லப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உய்த்துணரப்படுவ தாம். கிள்ளிவளவனும் நலங்கிள்ளியும் சமகாலத்தே வாழ்ந்தவ ராதல் வேண்டும்.

பெரும்பூண்பொறையன்

பரணர், பெரும்பூண்பொறையன் என ஒருவனைக் குறுந் தொகை 83-ஆம் செய்யுளில் குறிக்கின்றார்; 'களிறுகெழுதானைப்

பொறையன்' எனவும் 'இன்கடுங்கள்ளின் ... பொறையன்' எனவும் (அகம் 62, குறுந் 128) குறிக்கின்றார். இந்தப் பொறையன் ஒளவையாரால் குறிக்கப்பட்ட மறமிகுதானைப் பசும்பூண்பொறையனாகத்தான் ஆகவேண்டும். (அகம் 303) எனவே, அவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையாவான். பசும்பூண்பாண்டியனைக் குறிக்கின்ற மதுரைக் கணக்காயனாரால் குறிக்கப்பட்ட பொறையனும் இவ்விரும்பொறையாகத்தான் ஆகவேண்டும், கணக்காயனார் நக்கீரரது தந்தையாதலினால். மதுரைக்கணக்காயனாரே அகம் 338-ஆம் செய்யுளில் இளையர்பெருமகன் தொகுபோர்ச் சோழன் என ஒரு சோழனைக் குறிக்கின்றார்.

பெருஞ்சேரலிரும்பொறை, 'காவிரிமண்டிய சேய்விரிவனப்பின் புகார்ச்செல்வ' எனப்போற்றப்படுகின்றான் (பதிற் 73). சோழன் ஒருவன் இம்மன்னனால் வெல்லப்பட்டான் என்பது இதனால் புலனாகின்றது. அந்துவஞ்சேரலிரும்பொறையின் நகருள் புகுந்த முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கோயிலனைப் பெயர்ந்தனன் தன்னூர்க்கென உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் பாடலால் விளங்குகிறது. செல்வக்கடுங்கோவாழியாதன் 'ஒருமுற் றிருவ ரோட்டிய ஒள்வாள் செருமிகு தானை வெல்போ ரோயே' (பதிற் 63) எனவும் 'கல்லுயர் கேரிப் பொருநன்' (பதிற் 67) எனவும் குறிக்கப்படுகின்றான். ஆதலின் இக்கடுங்கோ சோழநாட்டைக் கைப்பற்றினனாதல் வேண்டும் எனத் துணிதற்கிடனுண்டு. எங்ஙனமாயினும், அடுத்து வந்த பெருஞ்சேரலிரும்பொறை 'புகார்ச்செல்வன்' எனப் புகழப்படுவதனால், சோழநாட்டைத் தனக்குரியதாக்கிக்கொண்டவன் என்பது வெளிப்படை. அதியமானுக்குத் துணையாகவந்த சோழ பாண்டியர்களை வென்றான் இம்மன்னன் எனக் கூறப்படுவதனால் சோழநாடு இவனால் கைப்பற்றப்பட்டதாதல் வேண்டும். எனவே, இவனால் வெல்லப்பட்ட சோழமன்னன் யாவன் என ஆய்வோமாக.

செல்வக்கடுங்கோவைப் பாடிய கபிலரோடு பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியவர்களும் பேகனைக் கண்ணகி காரணமாகப் பாடியிருப்பதனால், அரிசில்கிழாரால் புகழ்ந்துபாடப் பெற்ற தகடூர்எறிந்தசேரன் செல்வக்கடுங்கோவுக்குப் பிற்பட்டவன் என்பது விளங்கும். எனவே அந்துவஞ்சேரல் காலத்தவனான முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளிக்கும் பெருஞ்சேரலாதனை வென்ற கரிகாலனுக்கும் பிற்பட்டவனாதல்வேண்டும்; அல்லது கரிகாலனேயாகவோ அவனது சமகாலத்தவனாகவோ ஆயினும் ஆகலாம். பரணரால் குறிக்கப்படும் கரிகாலன் இக் கரிகாலனினும் வேறானவனென முன்னரே குறித்துள்ளேன். ஆதலின் இரண்டு கரிகாலர்களுக்கும் இடைப்பட்ட காலத்தவனான உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியே அச்சோழனாகலாம். கடலோட்டிய வேல் கெழுகுட்டுவன் காலத்து விளங்கியவன் கரிகாலன் (அகம் 376). அவன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகனாதல்வேண்டும் என்பது முன்னர்க் குறிக்கப்பட்டுளது. குட்டுவனது ஆட்சிக் காலத்து முற்பகுதியிலேயோ அதற்குமுன்னரோ வாழ்ந்தவனாதல் வேண்டும் இச்சென்னி. 'தகடூர்எறிந்தசேரனின் காலத்துச் சோழன் கிள்ளிவளவன் என்பது சிறிதும் பொருந்தாக் கூற்றும்' என்பது மேற்குறிக்கப்பட்ட புலவர்களது காலநிலையால் அறியத்தக்கதாம். பரணரால் குறிக்கப்பெற்ற கரிகாலன், செல்குடிநிறுத்தியவன் எனக் குறிக்கப்படுதலால் அவன் ஆட்சிக்குவருவதற்குமுன் அவனது நாடு பிறர்வசத்திலிருந்தது என்பது உணரத்தக்கதாம். இச்சென்னி சேரமான்பாமுளூர் எறிந்தவன் எனவும் குறிக்கப்படுகிறான். ஆதலின் தகடூர்எறிந்த சேரமன்னனால் வெல்லப்பட்ட சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியாக ஆதல்வேண்டும்.

(மரபுப்பட்டியல் பின்புறம்.)

[தொடரும்]

மரபுப்பட்டியல் (கூறிய பகுதி வரைக்கும்)

சேரர்		சோழர்	பாண்டியர்
உதியன்சேரலாதன்			
	அந்துவன்சேரலிரும்பொறை	முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி	
பெருஞ்சேரலாதன்	செல்வக்கடுங்கோ வாழியாதன்	கரிகால்வளவன்	
		வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிசெம்பியன்	
குடக்கோ நெடுஞ்சேரலாதன்	பெருஞ்சேரலிரும்பொறை	உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி	
கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன்	யானைக்கட்சேய்மாந்தரன் சேரலிரும்பொறை	கரிகாலன்	
		இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி	உக்கிரப்பெருவழுதி
		கிள்ளிவளவன்	நெடுஞ்செழியன் (தலையாலங்கானம்)
கோதை		கலங்கிள்ளி சேட்சென்னி	கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி
		திருமாவளவன்	இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன்
			வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி

தமிழ்மொழி

திரு. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள், தக்கலை.

(48-வது தொகுதி 268-ம் பக்கத்தொடர்ச்சி.)

இலக்கணம்

தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இலக்கணம் ஐவகையாய் நிகழ்கின்றது. வடமொழியாளர் எழுத்திலக்கணத்தைச் சிட்சை என்பர்; யாப்பைச் 'சந்தஸ்' எனவும், அணியை 'அலங்காரம்' எனவும் கூறுவர். 'சந்தஸை'யும் 'சாஸ்திரம்' என்றே சொல்வர். பொருளிலக்கணத்து அகப்பொருளைச் 'சிருங்கார சாஸ்திரம்' எனவும் புறப்பொருளை 'அர்த்தசாஸ்திரம்' எனவும் கூறுவர். சாணக்கிய சூத்திரம் மனுநீதி சாஸ்திரம் ஸ்மிருதிகள் முதலியன எல்லாம் புறப்பொருணூல்கள். பொருள் பற்றிய அகம் புறம் என்ற வகுப்பு வடமொழியில் இல்லை. புறப்பொருளையே பொருளெனக்கொண்டு அர்த்தசாஸ்திரம் எனக்கூறுவதே பெருவழக்கு. சிருங்காரம் என்னும் அகப்பொருளிலும் தமிழின்கண் வகுத்த இலக்கணநெறிகள் இல. அதனை நாடகத்துக்குரிய சுவைகளில் ஒன்றாகமட்டும் எடுத்துப் பாவம் முதலிய சிலவகை இலக்கணங்களைக்கூறுவர் அன்னோர். எனவே, வடமொழியாளர்க்குச் சொல்லிலக்கணம் ஒன்றே இலக்கணமாம். அதனை 'இலக்ஷணசாஸ்திரம்' என்றும் வியாகரணம் என்றும் கூறுவர். வடமொழி வியாகரணம் தமிழிலக்கணம்போலும் விரிவுடையது. தமிழுக்குக்கூறும் இலக்கணங்கள்பல வடமொழிக்கு ஏலாதவை, மறித்தும் அன்ன. மலையாளம் தெலுங்கு முதலியவற்றிற்கும் ஆங்கிலமுதலிய மொழிகட்கும் திருந்திய இலக்கணம் இல்லை. அம்மொழிகளில் வழக்கே இலக்கணமாகக் கொள்ளப்படுகின்றதாயினும் வரையறைப்பட்ட இலக்கணநூல்கள் இல. இலத்தீன் முதலிய மொழிகளுக்கு வரையறைப்பட்ட இலக்கணநூல்கள் உள. இலக்கண நூல்களைச் செய்யுளில்உரைக்கும் பெருமை தமிழ் வடமொழி

இரண்டிற்குமே சிறப்பாக உரியது. பிறசில மொழிகளிலும் இலக்கணம் செய்யுளில் பிற்காலத்துக் கூறப்பட்டுள்ளது.

இலக்கணம் வேண்டுவதில்லையென்று சிலர் இக்காலத்துக் கூறி வருகின்றனர். இக்கூற்றுத் தமிழரிடையன்றி மற்றை யாரிடத்தும் இதுகாறும் எழுந்ததன்று. இது கல்லாதவர்கூற்று. இலக்கணம் இல்லாத மொழியை உடையதொருநாடு அறிவில் தாழ்ந்து காணப் பெறும். அந்நாட்டில் வாழ்க்கை, ஒழுக்கம், மனப்பண்பு முதலியவற்றிலும் எவ்விலக்கணமுமின்றி வரம்பு அழியும். இலக்கணம் பேணாத மலையாள முதலிய மொழிகளிலும் இலக்கணம் இயற்றி வரும்போது இருக்கும் இலக்கணத்தை அறவே நீக்கிவிடவேண்டும் என்ற கொள்கைக்குச் சிறந்தபொருள்கொடுப்ப இயலாது. ஆங்கிலம் பிரெஞ்சு ஜர்மன் இலத்தீன் அரபி முதலிய மொழிகள் இலக்கணத்தைப் பொன்போலப் பாதுகாத்து வருகின்றன. இயற்கைக்கு மாறான விதிகள் சிலவற்றைப் பெற்றுள்ள இந்தி முதலிய மொழிகளிலும் இலக்கணம் வேண்டாமென்ற கொள்கை எழுந்ததில்லை. ஆங்கிலத்தில் ஓரெழுத்துத் தவறினும் பேரழிவாகக் கருதுவர். தமிழர் இயர்க்கை பாற்வை நாகரீகம் பெத்தார் காட்ச்சி என்றாற்போல விருப்பப்படி எழுதலாகுமென்பர். இயர்க்கையை இயற்கைஎன எழுதுவது வருத்தமன்று. ஆயினும் இயர்க்கை என்று எழுதுவது அறியாமை அன்றோ? தமது அறியாமைக்கு ஊற்றம் கொடுப்பவும் அதனை மறைக்கவுமே சிலர் இலக்கணத்தை மறுத்துவருகின்றனர். இலக்கணம் வேண்டுமென்பார் தந்நலம் கருதியன்று அவ்வாறு கூறுவது. விருப்பப்படி எழுதாது இலக்கணப்படி எழுதுவதென்றால் யார்க்கும் அரிதுதான். ஆயினும் மொழிநெறியை ஓம்புவதற்காக இலக்கணத்தைத் தழுவத்தான் வேண்டும். இயர்க்கை என்றெழுதுவாரும் யாரேனும் இயக்கை இயல்க்கை இயகை இயர்ச்சை என்றெழுதின், இயர்க்கை என்று திருத்துகின்றனர். ஆகவே, அவர்களும் முறையென்பதொன்றை விரும்புகின்றனர். அவர்களுக்கு முறை தெரியாமைக்குத்தான் வருந்தவேண்டும். இயற்கைதான் நேர் என்பதறிந்தோர் வேண்டுமென்று இயர்க்கை என்றெழுத விழையார்; அதனால் அவர்க்கு ஓர் ஊதியமும் இல்லை.

இலக்கணம் என்பது எவையோ சில முட்டுப்பாடுகளுக்கும் கடுங்கட்டளைகளுக்கும் நம்மை உட்படுத்துவதாகும் என்று சிலர் கருதுகின்றனர். மொழிகள் எங்கும் நேர்படவழங்கும் முறைதான் இலக்கணம். இலக்கணத்தில் ஒருமொழியை எப்படி வழங்குகின்றார்களோ மக்கள் அப்படிவழங்குக என்று அறிவிக்கவே, மொழி வழங்கிவரும் முறைகளை வகுத்தனர் புலவர். ஆசிரியர் தாமாகப் படைத்துக்கொண்டு எவ்விலக்கணமும் கூறவில்லை. கூறினும், பலர் வாய்ப்பட்டு மொழியில் அக்கூற்றுப் பேணப்படாது. எனவே, இலக்கணம் வேண்டா என்பதன் பொருள் மொழியின் இப்பொழுதுள்ள வழக்குமுறை வேண்டா என்பதுதான். ஒருமொழியின் வழக்கியலைத் தடுத்துவிட இயலாது. இலக்கணத்தை மறுப்போர் வேண்டின், சிலவழுக்களை மட்டுமே எழுதிவிடமுடியும்.

தொல்லிலக்கணவிதிகளாயினும் இப்பொழுது வழக்கொழிந்து போனவற்றைக் கொண்டுதானாகவேண்டுமென்று நாம் கூறவில்லை. புதுவது புகுந்த வழக்கங்களையும் பேணிக் கொள்ளலாகும். மொழிக்கு உயிர்போன்ற இலக்கணநெறிகளை விலக்கின், ஒவ்வொருவர் ஒவ்வோராற்றான் பேசவும் எழுதவுங் காரணமாகி, மொழிநடையார்க்கும் விளங்காமாற் போய்விடும். பலவிடத்தும் பலவாறு வழங்கும் மொழியில் பொதுநெறிகண்டு, யாரும் மொழியை எளிதில் அறிந்துகொள்ளும் பொருட்டே இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நூல்கள்

முச்சங்கக்காலத்திடை எழுந்த நூல்களை நோக்கின் தமிழின்கண் உள்ள நூற்பெருக்கம் வியக்கத்தக்கதாயுள்ளது. தமிழில் அகமும் புறமும் பற்றிப் பல்துறைப்படப் பாடப்பெற்ற நூல்கள் வடமொழிநூல்களினும் மிகுந்துள்ளன. ஏறத்தாழ இரண்டாயிரம் யாண்டுகட்குப் பிற்பட்ட நூல்களும் தமிழிற் பல. இலக்கியம் இலக்கணம் என்னும் இரண்டானும் பொலிவுபொதிந்துளது தமிழ். தோத்திரம், அகப்பொருளிலக்கியங்களில் தமிழ் வடமொழியை வென்று விளங்குகின்றது. தமிழிற்போல பிறிது எம்மொழியினும்

அப்பொருள்நூல்கள் மிகுந்து காணப்படவில்லை. புராணம் இதிகாசம் வேதாங்கங்களில் வடமொழி மிகுந்த நூல்களைக் கொண்டுள்ளது; இலக்கியம் இலக்கணம், நீதிநூல் முதலியன தமிழில் இருப்பது போல இன்று எம்மொழியினும் இல்லை. வடமொழி ஸ்மிருதிகளைப் போலன்றித், தமிழ்நீதிநூல்கள் பொதுநெறிகளையே விதந்துரைக்கின்றன. தமிழ்போல நூற்செழுமைமிக்க மொழியாக வடமொழியை ஒருவாறு கூறலாகுமெனினும் பிறமொழி எதனையும் தமிழ்க்கு இணையாகக் கூற வொண்ணாது. தமிழ்த் துறைகாணாதார் சிலர் தமிழ் ஓர் சின்மொழி எனக் கருதுகின்றனர். அது சின்மொழியால் பன்மதிதுலக்கும் பொன்மொழி என்பதைத் தமிழ்கற்றார்க்குமட்டுமே உணர இயலும்.

இசை ஓவியம் சிற்பம் அடிசில் மலர்தொடுத்தல் வாழ்க்கை இயல் அரசியல் துறவியல் உலகாராய்ச்சி தாவரஆராய்ச்சி மருத்துவம் சோதிடம் வாழ்க்கைவரலாறு நிமித்தம் உடற்குறி இறை (இரேகை) முதலிய பலபொருள்பற்றிய நூல்கள் தமிழில் விளக்கமுற்றிருந்தன என் றறிகின்றோம்.

மேனாட்டுமொழிகளில் பிற்காலத்திற்றான் நூல்கள் பெருகின. பத்தாவது நூற்றாண்டின் முன்னம் அம்மொழிகள் திருத்தம் பெற்றிருக்கவுமில்லை. மலையாளத்தில் அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலே இல்லை. அக்காலத்து நூல்களும் தமிழின் இழிவான உலகியல் வழக்கில் சில வேறுபாடுகளுடன் எழுதப்பட்டிருக்கின்றன. மலையாளம் இடைநிலை மயக்கத்தில் மெல்லினம் சார்ந்து நிற்கும் வல்லினங்களையும் மெல்லினம் ஆக்கிவந்தது அக்காலத்தே தான். ங்க (ங்ங); ஞ்ச (ஞ்ஞ); ந்த (ந்ந); ன்ற (ந்ந) ங்ங முதலியன மலையாளம். மலையாளர் தெங்கைத் தெங்ஙென்பர், பஞ்சைப் பஞ்ஞென்பர்; பிறவும் அன்ன. தங்கம், அஞ்சு, கண்டு, பந்து, தம்பி எனச் சிலவிடத்து வலி மெலியா. ணகர மகரங்களை அடுத்த வலிகளும் பெரிதும் மெலியா. 'ன்ற' என்பதனை 'ன்ன' என்னாது ந்ந என்பது வியக்கத்தக்கது. குன்று என்பதைக் குந்நு என்பது காண்க. னகரம் மலைமொழியில் பிற்காலத்தில்தான் வந்தது. ஙகர ஞகரங்கள் வரிவடிவில் ஒன்றே, யாண்டும்,

தமிழ்நூல்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றிக்கொண் டிருக்கின்றன. திருவள்ளுவர், நக்கீரர், இளங்கோவடிகள், கம்பர், வில்லி, வீரகவி; குமரகுருபரர் என்றின்னோர் ஒவ்வொருவர் காலத் தும் இருந்த புலவர்க்கும் நூல்களுக்கும் எண்ணில. பிற்காலத்துப் புலவரும் எண்ணிலர். தமிழ் புலவர் துணை இன்றி இருந்தகாலம் இல்லையெனச் சொல்லலாகும். புலவர்களது எண்ணே எண்ணரி தாக அவர் தம் நூல்களை எண்ணிக்கூறல் எண்ணத்தக்கதன்று.

இலக்கணவரிசையில் அகத்திய முதற்கொண்டு இலக்கண விளக்கம்வரை உள்ள நூல்களையும் இலக்கிய வரிசையில் திருக் குறள் முதல் ஆத்திசூடி வரையும், மணிமேகலை முதல் கந்தபுராண வரையும், நக்கீரர் பாடிய அந்தாதி முதல் தேவார திருவாசக நாலா யிர திவ்வியப்பிரபந்தமுட்பட அட்டப்பிரபந்தம் திருவருட்பா வரையும், உள்ள நூல்களையும் நோக்கினும் தமிழ்நூற்கடலின் அக லம் உய்த்துணரப்படும். படித்துக்கழிக்கத்தக்கனவாகிய நூல் களாற் பிறமொழிகள் பெருக்கமுற்றிருப்பப் படித்துப்பேணத்தக்க நூல்களால் பெருக்கமுற்றுள்ளது தமிழ்மொழி. இன்னும் அது சிறந்துவரும் நிலை வாயில் திறந்து வருகின்றது.

தமிழில் இலக்கிய இலக்கண நூல்கள் வேண்டுமளவு இருக் கின்றன. ஆயினும் ஒவ்வொருவர் கருத்தும் வன்மையும் விளங்கப் புலவர்கள் அவற்றில் வேறுபல நூல்களைச் செய்வது பிழையெனப் படாது. ஒருமொழியில் உள்ள நூல்கள் எல்லாவற்றையும் ஒரு வர் கற்கவேண்டும் என்றும் அதனால் நூல்கள் எண்ணிற் குறைய வேண்டும் என்றும் கூறுவது பொருந்தாது. கலைக்கொரு நூலாக எழுதினும் ஒருமொழியில்உள்ள நூல்களைஎல்லாம் கற்பது அரிதே. ஆங்கிலமுதலிய மொழிகளில் புதியனவாகவந்த நூல்கள் எண் ணிறந்தன. எம்மொழியிலும் நூல்கள் பல்கவேண்டும். நூற் றொகையே ஒருநாட்டின் முன்னேற்றத்தை விளக்கும். பலநூல்கள் இருப்பின் ஒவ்வொருவருந் தத்தமக்கு வேண்டும் நூல்களைக் கற் றுக் கொள்வர்.

மேனாட்டுக் கலைநூல்கள் தமிழில் நல்லநடையில் பெயர்க்கப்பட வேண்டும். மொழிபெயர்ப்பு, சொற்பொழிவு, கட்டுரை, கடிதம் எழுதுதல், கதைபுனைதல், புனைவுரைகள் முதலியவற்றை ஆங்கிலர் கலைகளாகப் போற்றி அவற்றை வளம்படுத்தும்பொருட்டுப் பல நூல்கள் எழுதுகின்றனர். தமிழிலும் அத்தகைய நூல்கள் வெளிவரவேண்டும். தாம் அறிந்ததே தமிழ் எனக் கருதி, மேல் நன்கு கற்க விழையாது, இழிந்த வழுவிய நடையில் சுவடிகளையும் பத்திரிகைகளையும் வெளியிடுதல் அறவே நிற்கவேண்டும். பிழைபட்ட பல புதினங்கள் (நாவல்கள்) தமிழில் வெளிவந்திருக்கின்றன. கலாசாலைகளிலுங்கூடப் பிழைநடைப்பட்ட சுவடிகளைப் பாடப் புத்தகங்களாக வைக்கின்றனர்.

ஆங்கிலமொழியில் பத்திரிகைகள் அறிக்கைகள் விளம்பரங்கள் கடிதங்கள் முதலின வழுவற்றநடையில் எழுதப்படுவது கண்டாயினும் தமிழர் தம்மொழியை வழுப்படாமற் காக்க முனைதல் வேண்டும்.

கருத்தை உரைநடையில் எளிது விளக்க இயலுமாதலால், தமிழில் உரைநடை நூல்கள் மிகவேண்டும். அந்நூல் கற்பார்க்கும் எளிதாம். எல்லாப்பொருள்களையும் மருத்துவம் சோதிடம் கணிதம் முதலியவற்றையுங்கூட, தமிழிலும் வடமொழியிலும் பிற சில மொழிகளிலும் செய்யுணடையிலே எழுதிவந்திருக்கின்றனர். செய்யுட்களைப் பன்முறை கற்றாலன்றித் தெளிவுண்டாகாது. பன்முறை கற்கும்போது செய்யுட்பொருள் நன்குஉறுதிப்படும். மனப்பாடஞ்செய்வதற்குச் செய்யுட்கள் மிகத்தகுதியுடையன. செய்யுட்கள் யாவராலும் நன்கு பேணப்படும். இந்நன்மைகள் இருப்பினும் பயிற்சியில் வருத்தமும் திருந்தக்கற்றார்க்கே பயன்படுதலும் உடைமையால் பொதுமக்கட்குரிய பொதுநூல்களை உரைநடையில் அமைப்பது சிறந்ததாம். செய்யுளினும் சில இருப்பது மொழிப்பெருமைக்கு ஆக்கந்தரும் என்க.

செய்யுளை உரைநடையிலும் உரைநடைச்செய்யுள்நடையி லும் அமைக்கும் வழக்கம் தமிழில் இருந்தது. பிறமொழிகள் போலன்றித் தமிழ் ஏற்றபெற்றி வழங்குவதற்கெல்லாம் இடந் தருவதொன்றாகையால், புலவர் தம் திறலை அதன்வழி எளிது காட்டினர். செய்யுளாக வந்த உரை (கவிவசனத்தில்) யாப்பால் மட்டும் செய்யுள் போன்றது; நடையால் உரையாகும். இக் காலத்தவர் சிலர் மோனை எதுகை முதலிய உறுப்புக்களை அமைத்து வெளிறுபட்ட உரைநடை எழுதி உரைச்செய்யுள் (வசனகவிதை) எனப்பாராட்டுவர். அது உரையுமன்று, செய்யுளும் அன்று. உரைச்செய்யுள் (உரைப்பாட்டு) சிலப்பதிகாரத்தில் மடுக்கப்பெற் றுள்ளது. சிவஞானமுனிவர் உரைச்செய்யுளும் சிறப்புற்றுள்ளது. நுண்மையும் ஆழமும் கொண்ட கருத்துக்களை உடைய உரைகளை யும் செய்யுளென்பது பண்டைவழக்கு. வடமொழியாளர் சம்பு காவியங்களில் உரைச்செய்யுட்களை மிகத் தொடுப்பர்.

பாட்டு இயற்றுவதற்கு உரிய புலமை இல்லாதவர்கள் பலர் இக்காலத்து வழுவுடைய வரிகளை எழுதிச் செய்யுள் என்று வெளி யிடுகின்றனர். சிலர் இசைப்பாட்டு என்று சில வசைப்பாட்டுக் களைப் பரப்புகின்றனர். இவற்றை உவந்தேற்றுக்கொள்ளும் பத் திரிகைகளும் நம் நாட்டில் நிரம்பியுள்ளன. தமிழர்க்கு உள்ள இக் காலத் தமிழறிவிற்கு இவையெல்லாம் அளவுகோல்களாம். இப் பாடல்களைக் கம்பர்பாடல்களிலும் உயர்ந்தனவாகவும் இவற்றின் ஆசிரியர்களைக் கம்பரின் மேம்பட்டவராகவும் கூறுவாருடைய தமி ழறிவு நம்மனோரால் அளந்தறிய வொண்ணாது. முரண்படாது உவகை விளைக்கும் கருத்தாழமும் அதற்கேற்ற சொல்லமைதி யும் தெளிவும் இன்பமும் பயந்து சிறப்புற்று நிற்பது செய்யுள் என் பது அறவே மறக்கப்பட்டுவிட்டது. சேவற்கோழிப்பாட்டும் பா வைப் பாட்டும் பிறவும் 'செய்யுள்கள்' ஆகிவிட்டன. 'கோழி கோழி கூவாய்' என்றாலும் இப்போது ஓர் பாட்டுத்தான். இது போன்ற பாடல்களை இயற்றுவதற்குக் கல்வி பெரிதும் வேண்டுவ தில்லை. தமிழில் செவ்வி சிதையாச் சிறந்தபாடல்களை இயற்றும் நோக்கம் பிறக்கவேண்டும். யாவரும் புலவராகலாமென்னும் எண் ணம் நீங்கவேண்டும். இயற்கையறிவும் பன்னூற்பயிற்சியும்

புலமைக்கு இன்றியமையாதவை. புலமை பிறப்பிலே பெறப்படுஞ் செல்வம்; கருவிற்றிரு.

பாயிரமுதற் பல்பொருளும் முறையால் அமைக்கப்பட்டு எவ்வகைக் குற்றங்களினும் நீங்கி நாற்பொருட் பயத்ததாய் வருவது நூல் என்ப. புலவனால் நூற்கப்படுவன எல்லாம் நூல்என்பதற்குச் சாலும் என்பதுபற்றி இக்காலத்தார் பண்டைநூலிலக்கண முற்றும் அமையாதவற்றையும் நூல் என்பர். வடமொழியார் தந்திரம் என்பர். நூல் என்பது சிறந்த தமிழ்ச்சொல்லாய் வழக்கில் வந்துள்ளமையின் அச்சொல்லைப் பொதுவிற் றழுவிக்கொள்வதனால் இழுக்கின்று. நேரிய புதுவழக்கங்கட்கு நாம் இடமளிக்கவேண்டும். தந்திரம், புத்தகம், கிரந்தங்களைவிட 'நூல்' சிறந்ததுதான்.

தமிழ்ப்புலவர்

தமிழ்ப்புலமை பிறமொழிப் புலமையினும் பலதுறைகளில் வேறுபட்டு ஒழுகுவது. பிறமொழிப்புலவர்கள் பெரும்பாலோரும் இயற்கைக் காட்சி இயற்கைநிகழ்ச்சி முதலியவற்றை இயல்பாகவும் புனைவாகவும் உரைப்பர். உவமை தற்குறிப்பு முதலிய அணிகளையும் செவ்வனம் உரைப்பர். பொருட்டன்மையை இயல்புக்கு மாறுபடாது கண்முன் நிற்கும் ஓவியம்போல உரைத்தல், பொருள்களை உவமை முதலிய அணிகளால் கூறல், பொருள்களின் தன்மையை உயர்த்துக் கூறல், புனைந்துரைத்தல், கற்பித்துக் கூறல், நுண்பொருள் கூறல், பொருளுண்மைகூறல் என்பன புலமையின் சிறந்த பிரிவுகளாம். உரோமர் தன்மையையும் புனைவும் விரும்புவர். ஆங்கிலர் தன்மையும் பொருளுண்மையும் விரும்புவர். ஜர்மானியர் நுண்பொருளையும் அவற்றுடன் மிகவிரும்புவர். வடமொழியாளர் அணிவகைகளையும் புனைவு கற்பனைகளையும் மிகவிரும்புவர். தமிழர் மேற்கூறிய எல்லாவற்றையுந் தழுவுவதுடன் தன்மை நவிற்சியையும் நுண்பொருட் கூற்றையும் பொருளுண்மையையும் புலமைக்கு உயிரெனக்கொள்வர். பொருள்களை விகாரப்படுத்தாது நுண்ணிய பொருள்களை ஆய்ந்து உவமித்தனர் பண்டைத் தமிழ்ப்புலவர். ஐவகை நிலங்களினும் காணப்பெறும் அரும்பொருள்களின் நுட்பம்கூறலும் அவற்றை உவமிப்பதும் இயற்கைநிகழ்ச்சிகளை ஓவிய

மாகக் காட்டலும் பண்டைப்புலவரிடத்துக் காணப்பெற்ற தனிப்பெருஞ்சிறப்பு. விநோத உவமைகளும் புனைவும் கற்பனையும் தமிழில் பிற்காலத்து மிகப்புகுந்தன. வடமொழித்தொடர்பு அதற்கு ஒரு காரணமெனக் கூறலாம். அவற்றிலும் தமிழர் இளைத்தவர் அல்லர் என்பதைப் பிற்காலத்து நூல்கள் விளக்குகின்றன. வடமொழியார்கள் போற்றும் உவமை புனைவு கற்பனை சிலேடைகளைக் கம்பர் கூத்தர் முதலியோரிடத்துக் காணலாகும். கம்பர் சிலவிடங்களில் காளிதாசனையும் கடந்து நிற்கின்றனர். தன்மைநவிற்சி வன்மையும் இரட்டுறமொழிதலும் கம்பர்க்கு உள. பண்டைச் சங்கநூல்களும் சிலப்பதிகார முதலிய காப்பியங்களும் பலஇயற்கை ஓவியங்களைத் தனிப்படவும் உவமையுடனும் நமக்கு அளித்துள்ளன.

தமிழ்ப்புலவர்கள் அருஞ்சொற்களையும் ஓசையினிமையையும் எதுகை மோனை முதலியவற்றையும் மிக விரும்புவர். பொருளில் மட்டும் அன்றிச் சொல்லினும் படிப்பார்க்கு இன்பமூட்டும் கருத்துடையவர் தமிழ்மக்கள். எதுகை மோனை முதலிய யாப்புறுப்புக்கள் எல்லாம் இனிதினியைந்து கேட்பார்க்கு இனியவாகி விளங்கும் பாடல்களைத் தமிழ்மொழி ஒன்றில் மட்டுமே நாம் இன்று காண்கின்றோம். பிறபலமொழிகள் எதுகை மோனை முதலிய சிறப்பு மிக இன்றி வரையறைப்பட்ட ஓசை நயமும் இன்றி வழங்கும் பாடல்களை உடையன. ஓசைவரையறைப்பட்ட வடமொழியிலும் எதுகை முதலியன இல்லை. தமிழ் பேச்சுவழக்கில் நிகழும்பொழுதே செய்யுள் இலக்கியங்கள் உளவாயின. தமிழர் உரையினும் பாட்டினையே மிக விரும்பினர். அதுவே தமிழில் உரைநடை நூல்கள் அருகினமைக்குக் காரணம்.

முற்காலத்தில் பெண்கல்வி தமிழரிடத்திற்றான் சிறந்திருந்தது. பெண்புலவர்கள் தமிழின்கண்ணேதான் மிக்கிருந்தனர். மேனாடுகளில் பெண்புலவர் விரலிட்டு எண்ணப்போதார். வடமொழியில் ஆங்காங்குப் பெண்புலவர் சிலர் இருந்தனர். அவருள்ளும் பெரும்பாலோர் பார்ப்பனர் அல்லாதவர். இதனால் பார்ப்பனரும் மேனாட்டவரும் பெண்கல்வியை மிகவும் புறக்கணித்திருந்தனர் என்பது விளங்குகின்றது. பத்தொன்பதாவது நூற்றாண்டு முதற்றான்

மேனாடுகளில் பெண்கல்வி தோன்றி வளரத்தொடங்கியது. வடமொழிகற்கும் பெண்களும் இன்று எத்துணையர்? பெண்புலவர் உளரோ?

பெண்களுக்குக் கல்வி கற்பித்து அவர்க்கு உரிமை கொடுக்க முன்னிட்டவர்கள் தமிழர்தாம். ஔவையார் ஆதிமந்தியார் நச்செள்ளையார் முதலிய அரும்பெரும் பெண்புலவர்கள் போல்வார் தமிழிலன்றி வேறு எம்மொழியில் உளர்? ஆடவர் இயற்றிய பாக்களினும்விடப் பெண்புலவர் பாடல்கள் சிலவிடத்துச் சிறப்புமிகுந்து காட்டுகின்றன. பெண்புலவர் பாட்டில் பெண்மை (விரும்பப் படுந் தன்மை)யும் உண்டு. அன்றி, வெண்மையாகிய பெண்மை இல்லை. ஆங்கில முதலிய மொழிகளிற் பெண்கள் பாடிய பாடல்கள் பெண் பாடல்களாகத் தோற்றுகின்றன. 'களம்புகலோம்புமின் தெவ்விர்' முதலிய பாடல்கள் கேள்வியாற் பெண்மை காட்டுவன அல்ல. சொல்லுணர்திறமையும் நல்லிசைப்புலமையும் வாய்ந்த மெல்லியலார் பலர் முற்காலந்தொட்டே தமிழின் அருஞ்செல்வங்களாய்த் திகழ்ந்து வருகின்றனர்.

தமிழ்ப்புலவர்களுடைய எண்ணிக்கையைக் கூறுமிடத்துத் தமிழ்நூல்களுக்குக் கூறியதையே கொணர்ந்துரைக்க வேண்டும். இதுகாறும் அறியப்பட்ட பிறமொழிப்புலவர்களின் எண்ணையும் கடந்துள்ளனர் இதுகாறும் அறியப்பட்ட தமிழ்ப்புலவர்கள் எனச் சுருக்கிக் கூறலாம். புலவர் பெயர்களையும் வரலாறுகளையும் புலப்படுத்துவதன் பொருட்டு அகராதி நூல்கள் வெளிவருகின்றன. அவையும் எல்லாப் புலவர்கள் பெயர்களையும் அடக்கிக்கூறலாற்றாவாயின.

[தொடரும்.]

ஸ்ரீ:

மதிப்புரை

திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் பகுதி 1. (முதற்பத்து) ஷை பகுதி 2. (இரண்டாம் பத்து):—[ஆக்கியோர், வித்வான் திரு. B. R. புருஷோத்தம நாயடு அவர்கள். சென்னைச் சருவகலாசாலைப் பதிப்பு. விலை, முதற்பகுதி ரூ 10; இரண்டாம்பகுதி ரூ 8.]

திருமாலால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் அருளிச் செயலான திருவாய்மொழியின் பெருமையை யாவரும் அறிவர். அது 'வேத நூலுணர்ந்தோர்க் கல்லால் விரித்திடும் பொருள் விளங்கா' என மிகவும் அரிதுணர் பொருளுடையதாய் விளங்குவது. அதனால் நான்மறை முதல்வரான ஆசார்யர்கள் அதற்கு நல்ல பல வ்யாக்யானங்கள் அருளினர். 'ஆயிரமா மறைக்கும் அலங்காரம் அருந்தமிழ்க்குப் பாயிர' மான அதன் சீர்மையொடு பொருந்த, அவை வடமொழி தென்மொழி விரவிய மணிப்ரவாள நடையில் வரையப்பெற்றன.

அவற்றுள் பகவத்விஷயம் என்ற பாராட்டுடன் பயில்வது ஈடு—முப்பத்தாறாயிரம் என்னும் பேருரையாகும். அது நம்பிள்ளை என்னும் பரமாசாரியரின் திவ்யகடாக்ஷத்திற்குப் பாத்ரபூதரான வடக்குத் திருவீதிப்பிள்ளையால் எழுதியருளப்பெற்றது. அதன் அருமை பெருமைகள் அளவிலடங்கா. கருவிலே அமைந்த திருவுடையார்க்கல்லது, அதன் பொருளுணர்ச்சி எல்லார்க்கும் எளிதிற் கைவருவதின்று. இது பயில்வோர் குறையேயன்றி பகவத்விஷயத்தின் குறையல்லவே?

ஆயினும், அதன் மணிப்ரவாள நடையை மாற்றித் தமிழாக்கம்பெறச் செய்தால் எல்லார்க்கும் எளிதுவிளங்கும் என்று நம்மவர் சிலர் நம்பியதில் ஓரளவு உண்மை இல்லாமலும் இல்லை. அதனால் சென்னைச் சருவகலாசாலை 'ஜூனியர் தமிழ்லெக்சரர்' வித்வான் திரு. B. R. புருஷோத்தமநாயடு அவர்கள் தாம்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் என்ற நிறைமனமுடையராய் மிக அரிதின்முயன்று இத் தமிழாக்கத்தை இயற்றித் தந்து உதவியுள்ளார்கள்.

இது மிகச் செவ்விய முறையில் திறம்பட அமைந்தது. வடமொழி பயிலாத தமிழரும் இதனால் பகவத்விஷயத்தின் பயன்நுகர்தல் எளிதிற் கூடுமாகையால் ஆசிரியர் நினைவு நன்கு நிறைவேறியது என்றே சொல்லலாம்.

தனித்தமிழன்பர் சிலர் இதுவும் போதிய கருவியாய் அமையவில்லை என்பரா யின், அக்குறை தவிர்த்தலரியதேயாகும். 'உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்தே' என ஆசிரியர் தொல்காப்பியர் ஆணை தந்தமை இங்கு நினைவுகூரத் தக்கது. எங்ஙனமாயினும் பகவத்விஷய மூலத்தைப் பயிலும் ஆர்வமுடைய வர்க்கு இது தக்க அடிப்படையாய் உதவுமென்பதில் ஐயமில்லை.

இனி, ஆசிரியர் திரு. புருஷோத்தமநாயடுஅவர்கள் பூர்வாசாரியர்களின் பொன்னடியில் அகலாத வழிபாடு பூண்டவர்கள். இதுவே அவர்களுடைய தமிழாக்கத்திற்குப் போக்கந் தந்ததென்பது இந்நூலின் பல விடத்தும் நன்கு வெளிப்படுகின்றது. இதன் முதற்பகுதிகண்டு, பலரும் அளித்த பாராட்டுரைகள் இரண்டாம்பகுதி விரைவில் வெளிவரத் தூண்டுதல் புரிந் தன. கனம் சென்னை முதன்மந்திரியவர்கள் அருளிய நல்வாழ்த்து அவற் றுள் மிகவும் முதன்மையானது. உரையாசிரியர்பெருந்தகை ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரவர்களும் பன்மொழிப்புலவர் திரு. வேங்கட ராஜுலுரெட்டியாரவர்களும் இதனைக் குற்றமற்ற ஆராய்ந்தார்களென்று தெரிகிறது, இதனைச் சருவகலாசாலைப் பதிப்பாக வெளியிடுமாறு நல்லுதவி யளித்த பேராசிரியர் திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள், தமிழ்மொழி தழைத்து வைணவசமயம் வளரச் சிறந்தஸேவை புரிந்திருக்கிறார்கள்.

இச்செயற்கருஞ் செயலால் இதன் ஆசிரியரும் சருவகலாசாலையும் என் றும் நிலையான புகழெய்துவதிற் சிறிதும் ஐயமில்லை. இவ்வாசிரியர் திரு. புருஷோத்தமநாயடுஅவர்களுக்கு இளமைக்காலத்தில் தமிழமுதப்பாலூட்டி வளர்த்த தாயாகும் தகுதி இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கு வாய்த்தது. அதனால் தன்மகனைச் சான்றோனெனக்கேட்ட அத் தாயின்மகிழ்ச்சி இப் போது அளவிலதாகும் என்பது மறவாமல் நினைத்தற்குரியது. சென்னைச் சருவகலாசாலையார் இப் புத்தகப்பகுதிகளை இன்னுஞ்சிறிது எளியவிலையில் எல்லார்க்கும் கிடைக்குமாறு வழங்குவித்து நலம் என்பது இங்கே குறிப் பிடத் தக்கது.

பிழை திருத்தம்.

முன் தொகுதி பக்கம் 273, வரி 27ல் 'என்னும்' என்பதை 'என்றும்' எனவும்; பக்கம் 274, வரி 22ல் 'எந்நாளும் இருத்தல்' என்பதை 'எந்நாளும் சிறை இருத்தல்' எனவும் திருத்திக்கொள்க.

கம்பரும் துளஸிதாஸரும்—உ

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

செந்தமிழ், புரட்டாசி-ஐப்பசி இதழை நினைவுகூரவேண்டியுளது. அந்த இதழில் பத்திராதிபர் எனக்கு ஒரு இனிய பணி இட்டுவைத்துள்ளார். கம்பர் இராமாவதாரத்தையும் துளஸியின் ராமசரித மானஸத்தையும் தொடர்ந்து படித்து ஈடில்லா இன்பத்தை அடைந்து, இயன்றால் மற்றவருக்கும் பகிருமாறு அழைத்திருக்கிறார்கள் அவர்கள்.

பலர் பலதுதலிக் கம்பன் கவிரஸத்தைச் சுவைக்கலாம். எனக்கு ஏனோ துளஸியை அவனில் காணவேண்டும் என்ற விழைதல் ஏற்பட்டது! இரு பெரியவர்களுமே என்னைச் சீறமாட்டார்கள் என்று நம்புகிறேன். "அரையு மாடரங் கும்படப் பிள்ளைகள் தரையிற் கீறிடில் தச்சரும் காய்வரோ" என்றவர் கம்பநாடர்: 'இராமன் என்ற பெயர் இருப்பதால் எவரும் என் கவிதையையும் ஏற்றுக் கொள்வர்' என்று சூள்பேசியவர் துளஸி. அவர்கள் இருவரும் என்னை இந்த 'சாஹஸக்கிரியை' க்கு மன்னிக்கக் கட்டுப்பட்டவர்களே; அது மட்டுமல்ல, என்னை ஆசிகூறி ஊக்குவிக்கவும் செய்வார்கள்.

இந்த எண்ணம் ஏன் வந்ததென்றால் சொல்லுகிறேன். அன்று சிரம்தாழ யான் வணங்கும் என் குருநாதன் இரண்டு மகான்களுடைய கருத்துக்களுள் ஒற்றுமை யிருந்தால் ஒருவர் ஒருவரை அடியொற்றி யிருந்தல் வேண்டும் என்று குறிப்பது மகான்களுடைய மனோசக்தியின் ஆற்றலை அறியாமையாகும் என்றார். இவ்விதம் சொல்லியவர் என் மதிப்புக்குரியவரானதாலும், இந்த எண்ணம் மற்றும் பல பெரியோர்களுக்கும் இருப்பது கூடுமாதலாலும் யான் பதில்கூறுமாறு இல்லாவிடினும் நிலை விளக்கம்தரக், கடமைப் பட்டுள்ளேன்.

முதல் விளக்கத்துடன்தான் இந்தக் கட்டுரை தொடங்கியிருக்கிறது. ஏனோ! என்பதுதான் அது. இரண்டாவதாக, பின்வரும் எண்ணம் என் மனதில் வேரூன்றிநிற்கிறது.

நம்நாடு பெரியோர் வாழ்ந்த நாடு; வாழ்ந்துவரும் நாடு. என்றுமே அழியாத பொருள்களையும் தத்துவங்களையும் கொள்கைகளையும் தேடி அவைகளை வலியுறுத்தியது நம் நாடு. அந்த ஒரு காரணமாகத் தான் அன்று ரிஷிகள்முதல் இன்று காந்திமஹான் ஈறாகப் பெரியோர்கள்எல்லாம் 'யாம் எடுத்துக்கூறி நிலைநாட்டும் கருத்துக்கள் புதியவையல்ல' என்று திட்டவட்டமாகக் கூறிவந்தனர். அழியும்பொருள்களைப்பற்றிப் பேசுபவர் தம் சிருஷ்டித்திறனை மெச்சிக்கொள்ளட்டும். அழியாப்பொருளைப்பற்றிப் பேசுகிறவர்கள் மேலையார் சொல்லிப் போந்தது என்று வலியுறுத்துவதையே நாம் பார்க்கிறோம்; அவர்கள் பேச்சுகளிலே கேட்கிறோம்; உரைகளிலே படிக்கிறோம். இந்த ஒரு நிலையைப் பெரியோர்களிடம் கண்டபிறகுதான் எனக்குத் துளஸிதாஸர் கம்பன்கருத்தைக் கையாளுவதில் தயங்கியிருக்கமாட்டார் என்ற கருத்து வலுப்பட்டது. தவிர பெருங்கருத்துக்களைப் 'பெரியவரும் சொல்லிப் போந்தனர்' என்பதனால் அக்கருத்துக்களுக்கு ஏற்படும் உரம் சொல்லத்தரமன்று. பலர் நீர்விட்டு வளர்த்த மரம்போல் அது ஆழ வேர்விடுகிறது.

மூன்றாவதாக துளஸிதாஸரிடமே இந்த நிலையைக் காண்கிறோம். அவரே தம் நூலைத் தொடங்கும் தருவாயிலேயே வால்மீகி ராமாயணம் தவிர மற்றஇடங்களிலேயிருந்தும் கருத்துக்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று வாய்விட்டுச் சொல்லியிருக்கும்போது நாம் ஏன் அஞ்சவேண்டும்? தவிர துளஸி கம்பர்எழுதிய கதையைக் கேட்டிருத்தல்வேண்டும் என்பதுதான் என் முடிபே தவிர அப்படியே நகல் என்பதல்ல. 'பெரியோர்கள் தயங்காத இடத்தில் நாம் அதைக் கூற அஞ்சவேண்டாம்' என்ற இந்த எண்ணம் தான் எனக்கு இந்தச் செயலைச்செய்ய வன்மைதந்தது. இருப்பினும், ஏதேனும் குற்றமிருந்தால் பெரியோர்கள் அளிபுரிந்து ஆசிதருக.

நிற்க துளஸி கம்பராமாயணத்தைச் செவிமடுத்தது உண்டு. அதன் சுவடுகள் துளஸியின் ராமசரித மானஸத்திலும் காண்கின்றன என்ற இம்முடிவுக்கு ஏறப் பாலகாண்டத்தில்இருந்து தொடர்ச்சியாக இரண்டு இராமாயணங்களையும் வாசித்து வரலாம். அதற்குமுன் ஒரு விஷயம் நம் நினைவிலிருத்தத்தக்கது. கம்பனும் துளஸியும் இருவரும் இராமபக்தர்கள். சிவனிடமும் அவ்வண்ணமே

அன்புகொண்டவர்கள். 'சிவத்துரோகி' என் பக்தன் என்று சொல் வானானால் அவன் அறிவிலி; எனக்கு அவனிடம் அன்பு ஏற்படாது; என்று இராமன் வாயிலாகத் துளஸி தெரிவிக்கிறார். இதைவிட அவர் சிவ அன்பைக் காட்ட வேறு எடுத்துக்காட்டு வேண்டாம்.

அவையடக்கம் கூறத்தொடங்கும் போதே இருவரும் ஒத்துக் கொள்ளவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எடுத்துக் கொண்ட பொருளின் பெருமையைப்பற்றி இருவருக்கும் சந்தேக மில்லை. தேவபாடையினிக்கதைசெய்த மூவருள்ளும் முந்தியவர் உரையின்படி கம்பன் இராமாவதாரம் செய்யப் புகுந்தான். துளஸி 'ராமாயணே நிகதிதம் க்வசித் அன்யதோபி'(ராமாயணத்தில் சொல் லப்பட்டதையும் கொஞ்சம் பிற இடங்களிலிருந்தும்) எடுத்து இராமசரிதமானஸத்தை எழுதினார். அவர் அதை ஸரஸ்வதியின் உள்ளம் குளிர அவள் தன் இருப்பிடம் விட்டு பக்தன் அழைப் புக்குச் செவிசாய்த்து ஓடிவந்த உடல்நோவு உள்ளநோவு தீரப் பாடினார். கம்பன் தெய்வமாக்கவி மாட்சி தெரியப்பாடினான்.

இருவரும் தம் அறிவின் குறைவைப்பற்றியும் பேசினர். அறிவு பிச்சை எடுக்க ஆசை ராஜ்யம் தேடுகிறது!' என்றார் துளஸி அழகாய். 'பாற்கடல் உற்று ஒரு பூசை முற்றவும் நக்குபு புக்கென ஆசைபற்றி அறையலுற்றேனே தவிர இது அறிவுத்திறன்கொண்டு தலைக்கட்டிமுடிக்கும் செயல் அல்ல' என்றான் கம்பனும்.

இவையிரண்டும்தவிர இருவருக்கும் மற்றொரு சிரமமும்வந்து சேர்ந்தது. அதிலும் இருவருக்கும் ஒரு ஒற்றுமையேற்பட்டது.

வடமொழியிலே வான்மீகம் புகழுடன் நின்றதேசத்தில் அவர் கள் இருவருக்குமே வேற்றுமொழியில் இராமன்கதை சொல்ல நேர்ந்தது. அதை எண்ணி இருவருமே கொஞ்சம் உளைகின்றனர்.

'நொய்தி னொய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மாமா மேழ்தொளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே'

என்று ஏங்குகிறான் கம்பன். வடமொழி வாடாமொழியாய்நின்ற காலம் அது. ஆங்கிலம்தெரிந்து அந்தமொழியிலேயே சிரிய நூல் களைப்படித்துத் தெரியும் ஆற்றல் உள்ள மக்கள் அதிகரித்து இருக் கும் சமயம் மொழிபெயர்ப்புக்களுக்கு மதிப்பு இருக்குமோ?

அதேபோல துளஸியும் முன்னூறு வருஷங்களுக்கு முன்னும் கூட அதேநிலைதான் போலும். (பாஷாபணித) ஹிந்தியிலே எழுதிய இராமாயணம்—சிரிக்கமாட்டார்களா? என்று அஞ்சுகிறார்.

ஆனால் உள்ளம் புனிதமானபடியால் இருவருடைய பனுவலும் நூற்றாண்டுகளாகச் சீர்பெற்று உலவியதைக் கருத்தில் வைத்துக்கொண்டு மேலே செல்வோம்.

திருவவதாரப் படலத்தில், ஒருபகல் தசரதமஹாராஜன் அயனையேநிகர் முனிவன் வசிஷ்டன்பால் சென்று மக்கட்பேறில்லாமல் எற்பின் 'வையகம் மறுகுறும்' என்ற அருந்துயர் அகத்தை வருத்தும் என்றனன். அந்தவேளை மாதவமுனிவன் மனத்து எண்ணும் வகையும் கனவுபோல்காணும் அந்தக் கதையும் இனிமை கொண்டன.

தேவர்கள் சென்று திருப்பாற்கடலில் பள்ளிகொண்டோனையேத்தி அழைப்ப அவன் செம்பொற்குன்றின்மேல் வருவபோற் கலுழன்மீது வந்து தோன்றினன். அதிசயமுடன் உவந்து அயனிருந்து தேவர்முறையீடு கேட்டான். நாம் 'வளை திகிரி விரிகொள் பாயல் இளைஞர்கள் என அடிபரவ அயோத்தி வருகுதும்' என்று உரைத்து எழுந்துபோயினன்.

பின்னர் உள்ள பாட்டைப் பார்ப்போம்:—

'என்னையா ளுடைய வையன் கலுழன்மீ தெழுந்து போய
பின்னர்வா னவரை நோக்கிப் பிதாமகன் பேசு கின்றான்
முன்னரே யெண்ணின் வேந்தன் யானென மொழிகின் றான்மற்
றன்னவா றெவரு நீர்போ யவதரித் திடுமி னென்றான்.'

பாலகாண்டம் திருவவதாரப் படலம்—25.

'அருடரு கமலக் கண்ண னருண்முறை யலரு ளோனும்
இருடரு மிடற்றி னோனு மமரரு மினைய ராகி
மருடரு வனத்தின் மண்ணின் வானர ராகி வந்தார்
பொருடரு மிறைவர் தந்த முறைவிடஞ் சென்று புக்கார்.'

ஷை 28.

கம்பனது பனுவல் துளஸியின் காவியத்தைவிட அளவில் பெரிது. துளஸிக்குக் கதையைச் சுருக்கமாகச் சொல்லவேண்டிய ஒரு தேவை இருந்தது. அது காலப்போக்கின் ஒரு கட்டுப்பாடு ஆகும். இதில் என்ன அதிசயம் என்றால் துளஸி இந்தக் கதையை

எழுதும்போது அப்படியே கம்பன் சொன்ன கதையைச் சுருக்கி எழுதியுள்ளார்போலத் தோன்றுகிறது. தற்காலத்தில் தலைவர்கள் பேச்சு செய்தித்தாள்களில் சுருங்கிவருவதை அறிந்தவர்கள் என் கூற்றை உணரமுடியும். தலைவர்கள்பேச்சிலுள்ள வாக்கியங் களே அந்தச் செய்தியில் தோற்றமளிக்கும். இதை அவர்கள் பேச்சு அல்ல என்று சொல்ல முடியாது. ஆனால் குறுகித் தோற்ற மளிக்கும். அவ்வளவு தான். துளஸியைக் கேட்டுப் பார்ப்போம்.

'தேவன இஹை சிகாய்
வானர தனு தரி தானி மஹம் ஹரி பத ஸேவஹு ஜாய்'

தேவர்களிடம் நீங்கள் வானர தேகம் தாங்கி உலகிலேசென்று இருந்து ஹரியினுடைய பாதசேவை செய்யுங்கள் என்று சொல்லி (பிரம்மா சென்றார்.)

'கயே தேவ ஸப் நிஜ நிஜ தாமா
வானர தேஹ தரீ சிதி மாஹிம் ஹரி மாரக ஜோஹஹிம் ரணதீரா'

தேவர்கள் தத்தம் இடம் சென்றனர். வானர தேகம் தாங்கி உலகிற்கு வந்து வீரர்களாய் ஹரியை எதிர்பார்த்து நின்றனர்.

அடுத்தபாட்டில் இந்த அடியைப் பாருங்கள்:

'மன்ன நீ வருந்த லேழேழ், பூதல முழுதுங் காக்கும் புதல் வரை யளிக்கும்' ... அதனுடன் இந்த அடிகளை ஒப்பிடலாம்:

'தாஹ தீர ஹோயிஹை (ங்) சுத்த சாரீ
த்ரிபுவன விதித பக்த பயஹாரீ'

'மன்ன நீ வருந்தல் நான்கு புதல்வர் ஏற்படுவர்; பூதல முழு வதும் புகழ்பெற்ற பக்தர் பயம் தீர்ப்பர்'... ஒற்றுமை உள்ளங்கை நெல்லிக்கனி.

இராமன் சீதையைச் சந்திக்கும் கட்டத்தை அடையலாம்:

அழகெனும் அணியும் ஓர் அழகுபெற நலம்கொண்ட ஜனகன் மகளை இராமன் கன்னிமாடத்தில் பார்க்கிறான். கண்ணொடு கண் ணிணை கவ்வ, உணர்வும் ஒன்றிட, அண்ணலும் அவளும் நோக்கிக் கொண்டனர். கண்ணிணைகள் தாழ்ந்தன. அவள் துதிகொள் கண்கள் அவன் தோளிலும் (உலகத்தின் தந்தைதானு என்று, தோள்பலத்தைக் கொண்டு அறியப் போலும்!) கனைகழல் வீரன்

செங்கண் அவள் தனத்திலும் (உலக மாதாவின் உண்மையறி யவோ!) தைத்தன. இருவரும் இதயம் மாறிப்புக் கெய்தினர். பிறகு நடந்ததையும் கம்பன் அழகாய்ச் சொல்ல நாமும் ஆனந்த மாய்க் கேட்கிறோம்.

ஆயினும் கம்பன் ஒரு விஷயத்தை உடனுக்குடன் நினைவூட்ட விரும்புகிறான். தமிழில் 'காதல் களவு' காவியமரபை ஒட்டியது. அந்தக் காரணத்துக்காக இராமன் சீதையைக் காணல் அவசியமா யிற்று. இவன் புலம்பவும் அவள் உருகவும் நேர்ந்தது. என்றாலும் தமிழர்மரபறியாத யாரேனும் இது சரிதானா? என்று கேட்டால் என்ன செய்வது? என்ற அச்சம் கம்பனுக்கு இருந்திருத்தல்வேண் டும். இல்லாவிடில் பின்வரும் செய்யுளுக்கு என்ன அவசியம்? என்ன அவசரம்?

'மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ?'

வசையில் ஐயன் என்று சொல்ல வேண்டியதன் நிர்ப்பந்தத் தை சாகுந்தலம் படித்தவர்கள் அறிவார்கள். துஷ்யந்தன் 'நற்பண் புடையார் மனதில் தகாத எண்ணங்கள் எழா' என்கிறான், சகுந் தலைகாதல் உள்ளத்தில் எறியவுடன். கம்பனும் அதை நினை வுறுத்துகிறான். மணமாகாத பிள்ளையோ பெண்ணோ பெற்றோர் சம்மதம்பெறாமல் மனமிழத்தல் கூடாது. இங்கே இப்படிப் பெற்றோரையும் தந்தைவாக்கையும் வில்லிறுக்க வேண்டிய பந்தயத்தையும் மறந்து சீதை மனமழிந்து புலம்புவதும் இராமன் தேய்வதும் நன்றா? தமிழ்க்காவிய மரபில் 'களவு' வேண்டும் என்றால் போதுமா? என்று கேள்விகள் எழ நேரலாம் என்று உன்னியல்லவா கம்பன் கையோடு, காதலர்கள்நிலையைக் கரையும் வண்ணம் வருணிக்கத்தொடங்குமுன், இந்த விளக்கத்தைத் தந்து விடுகிறான்.

சுருக்கமாகச் சொன்னால், இது பழைய அன்பு; இராமன் நல்ல வன்: இந்த இரண்டு காரணங்கள் போதாவா?

"பேசல் வேண்டுமோ" என்றதற்குக் கருத்து, பிறர் எவ்வாறு கொள்ளினும் இராமன் செய்கையைப்பற்றிய பேச்சை, அது சரி

தானு? என்ற பேச்சைத் தமிழ்க்காவிய மரபறியாத ஒருவரும் பேசவேண்டாம்; தமிழ்க்காவிய மரபறியாதவர் இது "பழைய அன்பு" என்ற கருத்தை உணர்ந்துகொண்டார்கள் என்ருல் பேச்சு ஏது? என்று பொருள்கொள்ளலும் தகும்: என்பது என் எண்ணம்.

துளஸிதாஸரும் இராமனையும் சீதையையும் சந்திக்கவைக்கிருர். அவருக்கு இரண்டு சங்கடங்கள். கம்பனுவது தமிழ்க் காவியமரபைக் காட்டலாம். அவர் என்ன செய்வார்? வால்மீகியும் சொல்லாத ஒன்று; அந்நாட்டு வழக்கத்திலும் இல்லாத ஒன்று. அதைச் சொல்லி விடுகிருர் அவர். அதைக் கம்பனிடமிருந்தே கொண்டார் என முன்பே கருதிச் சொல்லியிருக்கிறேன். ஆகவே அவருக்கு இதற்கு விளக்கம் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டதில் அதிசயம் ஒன்றும் இல்லை. விளக்கம் அவரும் இம்மாதிரியே தருகிருர்.

'ப்ரீதி புராதன லகை நகோயீ!' பழைய அன்பு, இதை ஒருவரும் காணவில்லை.

பழைய அன்பு, கம்பன் கருத்தல்லவா அது! மரபுமீறிய கருத்தைச் சொல்லும்போதல்லவா விளக்கம் தரவேண்டும்? துளஸியினுடைய இந்தக் கூற்றுக்குக் கம்பன் ஆதாரம்; என்பதற்கு காரியம் காரணம் இரண்டிற்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டபிறகுமா சந்தேகம்?

மற்றும் ஓரிரு ஒற்றுமைகளைப் பார்த்து இந்தக் கட்டுரையைத் தற்காலமாக நிறுத்தலாம்.

கார்முகப்படலத்தில் நகரமக்கள் இராமனையும் சீதையையும் பார்த்து வில்லிறுப்பதன் முன் மனம்துளங்கி நிற்கும் கட்டத்தை நினைவுறுத்திக்கொள்ளுவோம்.

பெண்கள்கூற்ருய் வரும் பின்வரும் அடிகளைக் காணுங்கள்.

'வள்ளல் மணத்தை மகிழ்ந்தன னென்ருல்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணத்தவன் வில்லை யெடுத்திப்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்ருர்.'

மூன்று விஷயங்கள் தெளிவாகின்றன. நகர மாந்தர்கள், இராமனும் சீதையும் மணத்துக்குத் தக்கவர்; இதற்கிடையே ஒன்

றும் குறுக்கிடல் கூடாது; வில்லைப் பந்தயமாக வைத்தது ஜனகன் பேதைமை! என்று எண்ணினர்.

துளஸியும் இந்த மூன்று விஷயங்களையும் சொல்கிறார்; நகர மாந்தர் வாயிலாகவே சொல்கிறார்; இராமன் வில்லிறுக்க எழுவதற்குச் சற்று முன்பாகவே சொல்லுகிறார்.

'ஹரு விதி வேக ஜனக ஜடதாயீ
மதி ஹமாரி அஸி தேஹு ஸுஹாயீ
பினு விசாரி பந தஜி நாநாஹூ
ஸீய ராம கர கரைம் விவாஹூ.'

இவை நான்கும் அடுத்தடுத்துவரும் வரிகளே. பொருள்: "கடவுளே! ஜனகன் பேதைமையை அகற்றும்; இந்த எங்கள் நல்ல எண்ணத்தை அவனுக்கும் தந்தருளும்: வேறு யோசனையின்றி அவன் பந்தயத்தை மறக்கட்டும். சீதையை இராமனுக்கு மணம் செய்து தரட்டும்."

கம்பன் துளஸி இருவருடைய கருத்தொற்றுமை, அதைப் புனைவதில்உள்ள ஒற்றுமை இரண்டையும் எடுத்தா எழுதிக்காட்ட வேண்டும்? கம்பன் செய்யுளிலுள்ள மூன்று கருத்துக்களும் இந்தச் செய்யுளிலுள்ளனவா? இல்லையா? என்று நீங்களே கண்டுகொள்ளுங்கள்.

இராமன் வில்லிறுக்க எழுந்து நடந்ததைக் கம்பன் பின்வருமாறு அனுபவிக்கிறான்.

'மாக மடங்கலு மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான்'

இராமன் சிங்கம், ரிஷபம், மேரு, யானை இவைகள் நாண நடந்தான். கருத்தென்ன?

சுபாவமான நடை; பெருமைகொண்ட நடை; அசையாத ஒளி பொருந்தியவன் நடை; அழகிய நடை இந்த நான்கையும் இரண்டு வரிகளில் வைத்துப்பாடினன் கம்பன்: துளஸியைக் கேளுங்கள்:

"உலகத்தின் நாயகன் ஸஹஜமாக மதம்கொண்ட அழகிய யானையின் நடையில் நடந்தான்" ஸஹஜகுணம் பெருமை, ஒளி, அழகு நான்கு குணத்தையும் மறக்கவில்லை துளஸியும் என்பது கவனத்துக்குரியது.

மற்றும் ஒரு செய்யுள்:—

'தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்.'

கண்கொட்டாமல் பார்க்கும் சபையினர்; முன்னும் பின்னும் நடந்ததை அவர்கள் காணாதவாறு வில்லிறுத்த கடுப்பு (விரைவு); இந்த இரண்டு விஷயங்களும் இதன்கண் அடங்கியுள்ளன.

துளஸிதாஸரும் இதை இப்படியே பார்க்கிறார்:—

எல்லாரும் கண்விழித்து நின்றனர்; ஆனால் பார்க்கவில்லை; இராமன் வில்லை எடுத்தான்; நாண் ஏற்றினான்; இறுத்தான்; மூன்றுலகங்களும் கேட்டன.

'வேத சடாவத கைஞ்சத காடே; காஹு ந லலகா ரஹேசப் டாடே
தேஹி சனமத்ய ராம தனு தோரா; பரேஉ புவன துனி கோர கடோரா.'

நான்கு வரிகளும்சேர்ந்த ஒருசெய்யுளே இது.

இவ்வளவும் எழுதிவந்தபிறகு மற்றொருஎண்ணம் எழுகின்றது. கடைசிச்செய்யுளை எடுத்துக்கொள்வோம். எல்லோரும் விழித்து நின்றனர். ஆனால் இராமன் எடுத்து நிமிர்த்து வில்லைமுறித்ததைக் காணவில்லை. உலகினர் சப்தத்தைக் கேட்டனர். ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. என்ன பதில்? கம்பனைக்கேட்டால் சொல்கிறான், 'கடுப்பு' என்ற சொல்லால். அந்தக்கருத்து துளஸியினுடைய செய்யுளில் தொக்குநிற்கிறது.

ஆகவே துளஸியை நன்கு அறியவேண்டும் என்றால் கம்பனையும் அறியவேண்டும். துளஸியைப்படித்துத் தெளியாத விளக்கங்கள், புரியாத கருத்துக்கள் கம்பனைப்படித்தால் விளங்கிவிடும் என்பது என் துணிபு. சுருங்கச்சொல்லின் துளஸியின் சில கருத்துக்களுக்கு வியாக்கியானத்தைக் கம்பனில் காணலாம்.

(நாடக கதாநாயகர்கள்)

பவபூதி—இராமன்

[திரு. N. S. தாத்தாச்சாரியர் அவர்கள், சிரோமணி, தஞ்சை.]

'காணக் கண் வேண்டும்' என்பது ஒரு பழமொழி. கண் பார்ப்பதற்குரிய கருவி என்பது இதன் பொருளன்று. உருவத்தைப் பாராமல் உள்ளத்தைப் பார் என்பதே இதன்பொருள். நம்முடைய வெளிக்கண்கள் ஒருபொருளை ஒரேவடிவில் தான் பார்க்கும். பார்ப்பதெல்லாம் உண்மையெனக் கூறவும் இயலாது. ஆனால் மகாகவிகளின் கற்பனைக்கண்கள் ஒருபொருளைப் பல நிலையில், பலவடிவத்தில் பார்க்கின்றன. ஆகவே அவர்களிடம் தான் காணக்கண்கள் இருக்கின்றன.

சக்ரவர்த்தி திருமகனான இராமனை மகரிஷி வால்மீகியின் கண்கள், மனிதனுக்கு வேண்டிய சீரியபண்பாடுகள் ஒருங்கமைந்த உத்தம மனிதனாகக் கண்டன. அந்த இராமனையே கவிச்சக்ரவர்த்தி கம்பருடைய கண்கள், விண்ணோர்போற்றும் வேதவிழுப்பொருளாகக் கண்டு வழிபட்டன. துளஸிதாஸருடைய கண்கள், தாரக மந்த்ரமான ஸ்ரீராமநாமத்தை ஏந்திநிற்கும் உள்ளத்தில் உறைந்திருக்கும் உறுதிப்பொருளாகக் கண்டன. தெலுங்கு ராமாயணம் எழுதின 'பாஸ்கரன்' என்ற மகாகவியும், மலையாள ராமாயணம் எழுதின 'துஞ்சத்து எழுத்தச்சன்' என்ற மகாகவியும் அவனைப் பலபடியில் பார்த்துப் போற்றினார்கள். ஆனால் 'பவபூதி' என்ற மகாகவியின் கற்பனைக்கண்களோ உத்தரராமசரிதம் என்ற நாடகத்தின் மூலமாய், இராமனை மனிதருள் மாணிக்கமும், பொதுமக்கள் உள்ளமாகிய அரியாசனத்தில் வீற்றிருக்கும் ஒரு ஜனநாயக நாட்டின் தலைவனும் ஆகக்கண்டன. இதனாலேதான் அவனை வால்மீகிராமன் எனவும், கம்பர்ராமன் எனவும், பவபூதி ராமன் எனவும் பலநிலையில் வழங்கினர் போலும்.

---

* இது 27—11—52ல் அகிலஇந்திய வானொலிநிலையத்தில் பேசியது அந்நிலயத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

இப்பொழுது, பவபூதியின் உத்தரராமசரித நாடக கதாநாயகன் இராமனைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

இக்கவி ஏழாம்நூற்றாண்டின் இறுதியில் தோன்றினவர். இவர்பிறந்த ஊர் பத்மபுரம். இவருடைய இயற்பெயர் நீலகண்டன் என்பது. இவர் மஹாவீரசரிதம், மாலதிமாதவம், உத்தரராமசரிதம் என மூன்று நாடகங்கள் எழுதினார்.

இவற்றுள் உத்தரராமசரிதத்தை மகாகவி காளிதாஸனே புகழ்ந்து போற்றியதாக ஒருகதை வழங்குவதுண்டு. பட்டாபிஷேகத்துப் பின் நிகழ்ந்த இராமாயண கதையைப் புதுமெருகு கொடுத்து நாடகமாக இயற்றினார் பவபூதி மகாகவி.

நாடகத்தை ஊன்றிப் படித்தால், உள்ளம் சிதையும்; ஊனும் உருகும். ஸீதை கருத்தரிக்கிறாள். ரிஷ்யச்ருங்கர், பன்னிரண்டு வருடம் செய்தற்குரிய, 'ஸத்ரம்' என்ற யாகத்தைத் தொடங்குகிறார். இராமனையும் சீதையையும் விட்டுவிட்டு, யாவரும் அந்த யாகத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். வசிஷ்டரும் அருந்ததியும் கூடச் செல்கிறார்கள். தவமகள் சீதை தனிமையில் இருக்கிறாள். இராமன் அவள் அருகில் இருந்து ஆறுதலளிக்கிறான்.

இந்த வேளையில் வசிஷ்டர் 'துர்முகன்' என்பவன் மூலம் இராமனுக்குத் தூதனுப்புகிறார். சீதை கர்ப்பிணி; அவளை நன்கு கவனித்துக்கொள்; பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் மயற்கைநோய் ஏற்படுவது இயற்கை; அப்பொழுது அவள் விரும்பியதைச் செய்து கொடு; நாங்கள் யாகத்தில் கலந்துகொள்ளவேண்டியிருக்கிறது; உன்னுடன் இருக்கமுடியவில்லை; நீயோ, அதிகம் நாடாளும் அனுபவமற்றவன்; நாடோ உன் கைக்குப் புதியது; எங்ஙனமாயினும் பொதுமக்கள் எண்ணத்தைப் போற்றுவாயாக; இது உனக்குப் புகழ்தரவல்லது உன் முன்னோர்கள் சென்றவழியும் இதுவே; என்பது அத் தூதுவாக்கியங்களாம்.

அரசியல்குருவான வசிஷ்டர் வாய்உரையை வேதவாக்கெனக் கொண்ட இராமன் உடனே கூறியது இது. "என் நாட்டின் மக்களுக்காக மனநட்பையும் மறப்பேன். இளகிய உள்ளத்தையும் மாற்றிக்கொள்வேன். சமயம் வாய்த்தால், மாசில்லா மாணிக்கம்

போன்ற ஜானகியையும் துறப்பேன் பின்வாங்கமாட்டேன்;" 'ஸ்நேஹம் தயாஞ்ச ஸௌக்யஞ்ச' என்று தொடங்கும், இக்கருத்துள்ள சுலோகம், அரசியல் உறுதிமொழிபோலக் கூறப்பட்டிருக்கிறது. அப்பொழுது அருகிலிருந்த சீதையும் இராமன் கூறியதைப் புகழ்ந்து பாராட்டினாள்.

இனி, சீதையின் மகிழ்ச்சிக்காக, பட்டாபிஷேகத்திற்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளைப் படத்தில தீட்டச் சொல்லி, இராமன் அவளுக்குக் காண்பித்துவந்தான். அப்பொழுது தண்டகாரணியத்தைக் கண்டதும் மறுமுறை அங்கு இராமனுடன் சிலநாள் தங்க வேண்டும் என்ற ஆசை, மயற்கைநோய்போல, சீதைக்கு உண்டாகி விட்டது. இதுநிற்க.

நாட்டில் ஓர் இளம்பிள்ளை இறந்தது. அதன் தந்தை குழந்தையுடன் வந்து இராமனுடைய அரசியலைக் குறைகூறி முறையிட்டான். அதன்பொருட்டு இராமனும் நாடுசோதனைக்குப் புறப்பட்டான். யாகக்குதிரையையும் இலக்குமணன்மகன் சந்திரகேதுவுடன் அனுப்பிவிட்டான். அப்பொழுது 'துர்முகன்' என்ற ஒற்றன் சீதையைக்குறித்த ஓர் அவதூறான வார்த்தையை இராமன் காதுகளில் கொளுத்தினன். பாசிநீங்கிய தாமரைமலரில் பனிமழை பெய்ததுபோலிருந்தது; தீயிடை யிட்ட தளிர்போல இராமனுடைய உள்ளம் வெதும்பியது; முகமும் வாட்டமுற்றது.

திருமகளான சீதையைத்துறந்து வம்புவளராமல் தடுப்பது, அல்லது அறிவற்றவன் பேச்சை அலக்ஷியம்செய்து விடுவது, இரண்டில் எதுசெய்யத்தக்கது என்ற போராட்டம் இராமன் உள்ளத்தில் வலுத்தது. வசிஷ்டர் வாய்மொழியும், தான் அளித்த வாக்குறுதியும் நினைவுவந்தன. மெய்யனான இராமன் மக்களின் வார்த்தையை மதித்துநடக்கத் துணிவுகொண்டான். குணசீலனிடம் குற்றம்காண்பதிற் பயனில்லை. தர்மசங்கடமான நிலைமை. குறைகூறுவது எளிது. வழிவகுப்பது அரிது.

மனைவிசீதையை இலக்குமணனோடு வால்மீகி ஆச்சிரமத்தருகே அனுப்பினன். தானும் தண்டகாரணியத்திற்குச் சென்றான்

இராமன். காட்டில் சீதை இருகுழந்தைகளைப் பெற்றுவிட்டு, கங்கைநதியில் மறைந்தாள். குழந்தைகளை வால்மீகிமுனிவர் பாது காத்துவந்தார்.

சீதையும் கங்கையும் மறைந்தவடிவுடன் இராமனைக் காண விழைந்தனர். அருளாளுயர் ஐயனை தண்டகாரணியத்திற் கண்டனர். கோதாவரி நதிக்கரை; குன்றுகளின் குளிர்ச்சியான தோற்றம். வெய்யோன் ஒளி தன் மேனியில் விரிசோதியின் மறையத் தனியே நின்றான் இராமன். சீதையை நினைத்தான். ஏழைபங்காளன் ஏழையாக நின்றுவிட்டான். ஏத்தித்தொழும் பொருள் ஏமாற்றக் கோலம் கொண்டது. வாடினான், வருந்தினான், ஏங்கினான், இளைத்தான்; அஞ்சினான், அலறினான்.

இந்தநிலையை உத்தராராமசரிதத்தில் படித்தால், கல்லும் கண்ணீர் மல்கும். மரமும் விம்மி அழும். அலைகடலில சிக்கியவனுக்கு ஆறுதல்கூற யார் வருவார்கள்? தானே தன் மனப்புண்ணுக்கு மருந்திட்டான். அசுவமேத யாகத்தைத்தொடங்க அயோத்தி சென்றுவிட்டான். குதிரையும் சந்திரகேதுவும் திரும்பவில்லை. தேடிக்கொண்டு வால்மீகி ஆச்சிரமத்தருகே வந்தான் இராமன். சண்டையிடும் தன் மகனையும், தாய்மார்களையும், ஜனகரையும், வால்மீகி முனிவரையும், வசிஷ்டர் அருந்ததிகளையும், சந்தித்தான்.

வால்மீகி இயற்றிய நாடகம் நடிக்கப்பட்டது. இராமன் சீதையைக் காட்டில்விட்ட பின்பு நடந்த நிகழ்ச்சிகள் அதில் காணப்பட்டன. கடைசியாகப் பெரியோர்களின் பேச்சுக்கிணங்கி, அங்கு வந்த சீதையை ஸ்ரீராமன் ஏற்றுக்கொண்டான். பிரிந்த தம்பதிகள் பிரியாது கூடினர். இது உத்தராராமசரித நாடகத்தின் கதைச்சுருக்கம். இனி இக் கதாநாயகனை இராமன் குணங்களை ஆராய்வோம்.

இராமன்என்றால் இனியன் என்று பொருள். அவன் கருத்துக்கினியன், காட்சிக்கினியன். நல்லார்க்கும் பொல்லார்க்கும் இனியன். யாவரையும் அழச்செய்பவனான இராவணனுக்கும் அவன் இனியனாக இருந்தான். குற்றம் உரைத்த குடிமக்களுக்கும் கோதில்லாக் குலவிளக்கான சீதைக்கும் அவன் இனியவனானான்.

அவன் அரசன் என அழைக்கப்பட்டதன்றி உண்மையில் அரசனாக இல்லை; ஆனால் ஒருகுடியரசாட்சியின் தலைவன் போல் இருந்தான். அவன் ஆண்டநாடு அப்பொழுதே குடியரசுநாடாக விளங்கியது. எங்கும் இராமன் என்ற பெயர் முழங்கிற்று. உலகமே இராமனிடம் மையலும் மதிப்பும் கொண்டிருந்தது. அவன் புகழ் எங்கும் பரவிற்று.

நமது நாட்டுத்தந்தை காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்த காவலன் இராமனேதான். குடிகளின் நம்பிக்கைக்கும் நலனுக்கும் தன்னைத் தியாகம் செய்தான். துன்பத்திலே இன்பம் கண்டான். இத்தகைய செயலை அருந்தவம் என்று உபநிடதங்கள் புகழும். 'துன்பமுழுவதற்கே நான் படைக்கப்பட்டேன்' என்று இராமனே சொல்லுகின்றான். கொள்கை என்ற கொம்பில் கருத்தென்ற கொடியைப் படரச்செய்தவனுக்குத் தன்னலம் ஏது?

இராமன் வாய்மையே தன்கொள்கையாகக் கடைப்பிடித்தான். 'உண்மை வெல்லும்' என்ற உபநிடதக்கருத்தே அவன் அரசியல் கோட்பாடு. 'வ்யஸநேஷு மநுஷ்டாணும்' என்ற சுலோகம் அவன் மக்களைப்பேணினமை வருணிக்கின்றது. பொதுமக்கள் உள்ளம் தளர இராமன் பூமனம் வாடும். அவர்கள் மகிழ அவன்மனம் மகிழும். இவ்வாறு குடிகளைப் புரப்பதில், அவர்களுக்கு ஒரு தந்தையாக விளங்கினன். அவன் நாட்டுமக்களுக்குப் பரிபூரண பேச்சுரிமை இருந்ததென்று தெரிகிறது. இல்லையானால் ஒரு எளிய மனிதன் தெருவில் வெளிப்படையாக அரசனை அவதூறுசொல்லத் துணிவது எவ்வாறுகூடும்?

புகழ்ச்சியைக் காட்டிலும் இகழ்ச்சியையே இராமன் வரவேற்றான். புகழ்ச்சியில் பெரும்பாலும் பொய் மறைந்திருக்கும்; இகழ்ச்சியில் மெய்ம்மையும் தூய்மையும் விளங்கித் தோன்றும். இவ்வுண்மையை இராமன் நன்கு உணர்ந்தவன். அவன் அரசாட்சியில் தசரதன்புகழ் மறந்துபோயிற்றென்று மக்கள் அவனைப்புகழ்வதாக துர்முகன் சொன்னான். அதுகேட்ட அவன் 'இது புகழ்ச்சி; இதுவேண்டாம்; குறையைக்கூறு; நிறையைக்காண்போம்; குறையை அகற்றுவோம்' என்றான். இதனால் இராமன் தன்னிடம்

பொதுமக்களின் நம்பிக்கை வளர்த்து, அவர்களின் துன்பம் களைந்து இன்பமளிக்கவேண்டும் என்று நினைப்பது கையிலங்கு நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

அன்றியும், கலைக்கோட்டுமுனிவரின் யாகத்திற்கு வசிட்டரும் சென்றபின்பு, இராமன்மட்டும் வேள்வியைவிட நாட்டைப்பாதுகாப்பதே கடமையென அயோத்தியில் தங்கிவிட்டான். இஃது ஒன்றே இவனுடைய மக்கள் பற்றிற்குச் சான்றாக அமையவல்லது.

அரியாசனத்தில் அமர்ந்த அரசனாகத் தன்னை மதியாமல் குடிமக்களின் தலைமைத் தொண்டன் எனத் தன்னை எண்ணிக்கொண்டவன் இராமன். தன் நாட்டில் ஒரு குழந்தை இறந்ததைக்கேட்டு, அதன் தந்தையின் ஆணையைச் சிரமேற்கொண்டு, காடுசோதனைக்குப் புறப்பட்டதே அவன் தன்னைத் தொண்டனாகக் கருதிக்கொண்டதற்குப் போதிய சான்று.

இராமராச்சியத்தில், அரசனாயினும் ஆண்டியாயினும் யாவரிடமும் கடமை கண்டிப்பாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதை அவன் அதிகாரிகளுக்கு உணர்த்தியிருந்தான்போலும். துர்முகன் சீதாதேவியைக்குறித்து ஒற்றினால் அறிந்துவந்த பழிச்சொல்லை இராமனிடம் வாயாற் சொல்லமாட்டாமல் வருந்திநின்றான். ஆயினும் அவன், இது என் பணி; என்செய்வேன்; என்று அப் பொல்லாங்கு மொழியைப் புண்பட்டமனத்துடன் இராமன் செவியில் ஏற்பித்தான். இதிலிருந்து கார்முகில்வண்ணன் கடமைக்கண்ணாளன் என்பது உய்த்துணரக் கிடக்கிறது.

இவ்வளவு நேர்மையுடையவனானாலும், அவன் சீதாதேவியிடம் நேர்மைதவறினான் என்று குறைகூறப்படுகிறது. பூர்ணகர்ப்பிணியாயிருக்கும்பொழுது, வஞ்சனையாக அவளைக் கானகத்தில் விட்டது என்ன நியாயம்? என்ற கேள்வி அன்றுமுதல் இன்றுவரை நின்றுவிட்டது. அது பலருடைய பகுத்தறிவையும் கருத்துரிமையையும் பறிக்கிறது. இது பொய்யென்று புறக்கணிப்பாரும் உளர்; மெய்யென்று வழிவகுப்பாரும் உளர்.

இந்தப் பிரச்சினையில் நம் மஹாகவி பவபூதியும் சிக்குண்டார் போலும். எண்ணியதை யாருக்கும் அஞ்சாமல் எடுத்துரைப்பதில்

இவர் சங்கப் புலவர் நக்கீரருக்குச் சமமானவர். இத்தகைய ஒரு கதை இவர்காலத்திலேயே எல்லோருடைய மனத்தையும் புண் படுத்தியிருக்க வேண்டும். இங்ஙிலையில் இராமன்மீது சுமத்தப்படும் இப் பெருங்குற்றத்தைப் போக்க வகையின்றிப் புலவர்கள் வாளா விருந்திருக்கவேண்டும். ஆனால் பவபூதியோ, இராமன்மேல் ஏறின இந்த மாசுதீர்ப்பதற்கே, உத்தராமசரிதம் என்ற தம் ஒப்பற்ற நாடகத்தை எழுதிமுடித்தனர் என்னலாம்.

ஏனெனில், இந்தப் பொல்லா நிகழ்ச்சியை அவர் தம் கதையில் புகாமலே விலக்கியிருக்கலாம். அல்லது தம் 'மஹாவீரசரிதம்' என்ற மற்றொரு பெரிய நாடகத்தில் எங்கேனும் ஓர் இடத்தில் இலேசாகக் குறித்தும் போயிருக்கலாம். ஆனால் அவர் அங்ஙனம் செய்யாமல் இதன் உண்மையை விளக்க இத் தனிநாடகம் இயற்றி னார்.

இதனால் இராமன்செய்தது, அவன் நிலைமைக்கும் இடத்திற் கும் நேரத்திற்கும் ஏற்றதே என அவர் நினைக்கிறார் என்று தோற்று கிறது. இது தவறானால் பொறுக்க வேண்டுகிறேன்.

ஒரு மனிதனுடைய தகுதியை, அவன்செய்த முன்செயல் பின்செயல் இவைகள் கொண்டே ஆராய்ந்து துணியவேண்டும். இராமன் இளமைக்காலத்தில், விசுவாமித்திரமுனிவரின் ஆணை பெற்றபின்னரும், அரைமனதுடனேயே தாடகையைக் கொன் றான். பிறகு தன் தேவி சீதையைக் கொல்லவந்த சூர்ப்பநகை யைப் பெண்என்று கருதியே மானபங்கம் செய்தான். சீதை குற்ற மற்றவள் என்பதை, அவள் தீயிற் புகுந்து தெளிவித்தலால் தெரிந்துகொண்ட பின்பும், அறிவற்றவன் பேச்சின்பொருட்டுத் தன்னந்தனியே கானகத்தில் விடுவானா? தன் மனையாளாயினும், அவளை ஒரு குடிமகள் என்ற நிலையிலாவது காக்கவேண்டுவது காவலன் கடமையல்லவா? அவளைக் காட்டிற்கனுப்புமாறு யாரும் சொல்லவில்லையே? ஆகையால், இராமன் அவ்வாறு செய்ததற்குத் தக்க காரணம் காணவேண்டுமேயொழிய அதனைக் குறைகூறுவது பொருந்தாது.

'ஸதாம் கேநாபி கார்யேந லோகஸ்ய ஆராதநம் வ்ரதம்' நல்லோர்களுக்கு எவ்விதத்திலும் உலகத்தைத் திருப்திசெய்வதே கடன் என்ற உண்மை இராமன் உள்ளத்தில் படர்ந்திருந்தது. 'ஆராதநம்' என்ற சொல்லுக்கு, தன்னைக் குற்றங்குறை அற்றவனாக்கி அதைக்கண்டு பொதுமக்கள் முழுநம்பிக்கையுடன் வாழ்வதே, என்ற பெரும்பொருள்கொள்ளவேண்டும். தன்னிடம் குறையைவைத்துக்கொண்டு பிறரைச் சீர்திருத்தி ஆள்வது எங்ஙனம்? மற்றும் அரசியல் குரு வசிஷ்டர், 'மக்கள்எண்ணத்தை மதித்துநட' என்று தனக்கு விதித்த கட்டளையையும் கடக்கலாகாதே? அன்றியும் ஸத்யஸந்தன், ஸத்யவாக்யன், த்ருடவ்ரதன், ஸத்யதர்மரதன் என்றெல்லாம் போற்றப்படும் இராமன் 'பொதுமக்களுக்காக ஜானகியையும் கைவிடத்தயங்கேன்' என்று சொன்ன வாக்குறுதி தவறலாமா?

இன்னும், 'ஸீதா விவாஸந பவோ கருணா க்ருதஸ்தே', ஸீதையைப் போக்கிட்வீரனே! உன்னிடம் கருணை என்பதும் உண்டோ?' என்று அவன் தன்னைத்தானே நொந்துகொண்டபொழுதும், 'தலையால் வகிக்கவேண்டியபூவைத் தாளால் சிதைத்தேனே' என்று அவன் சீதையை நினைந்து வருந்தியபொழுதும், அவள்பால் அவன் கொண்ட அன்பு எல்லையற்றதென்று விளங்குகிறது. அன்றியும் இராமன் தனக்கு இழைத்த தீங்கிற்கு சீதை சிறிதும் சினங்கொள்ளவில்லை; தண்டகாரணியத்தில் தனிமையிலிருந்து அச்செயலுக்கு அவனைப் பாராட்டவும் செய்கிறாள்.

இவ்வாறு தன்தேவி சீதையையும் தனிநிலையில் தியாகம் செய்து ஒழுங்கு, கொள்கை, பொதுஜனநம்பிக்கை என்ற தன் ஒப்பற்ற உயர்குணங்களைக் காப்பாற்றினன் இராமன். இங்ஙனம் நாடகத்தை முற்றுவிக்கிறார் மகாகவி பவபூதி. இதனாலேயே அவர் உத்தரராமசரிதத்தில் எல்லோரையும் வென்றார் என்ற புகழ் பாவியுள்ளது. இவரிடம் காணக்கண் இருந்தது; ஆகவே பெருமை எய்தினார்; உண்மையான இராமராச்சியம் வகுத்தார். வாழ்க வையகம்.

திருவள்ளுவர் திருநாள்

தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஒருநாள்; தமிழ்மக்கள் யாவரும் கொண்டாடுக.

பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள், எம். ஏ., பீ. ஓ. எல்.
தமிழ்மறைக் கழகத் தலைவர்.

தமிழ்மறை எனவும் பொதுமறை எனவும் போற்றப்படும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் யாவருடைய பாராட்டுக்கும் உரியவர். அவருடைய திருநாள் தமிழரின் தனிப்பெருந் திருநாள்; தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஒப்பற்ற திருநாள்; அன்பும் அருளும் அறமும் ஆட்சி செய்யும் திருநாள். ஆதலினால், சாதி மத பேதமின்றியும், அரசியற்கட்சி வேறுபாடின்றியுந் தமிழ்மக்கள் யாவரும் ஒவ்வொருவீட்டிலுந் திருவள்ளுவருடைய திருநாளைக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

அவருடைய திருநாளை, மாசி உத்தரம் என்று ஒருசாராரும், வைகாசி அனுடம் என்று மற்றொருசாராருங் கருதுகின்றனர். இதனாலே சில இடங்களில் மாசி மாதத்திலும் வேறு சில இடங்களில் வைகாசி மாதத்திலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடி வருகின்றனர். இந்த இருநாட்களில் ஒன்றினைக் கொண்டாடுதலே நல்லது என்று முடிவு செய்து, இதுபற்றிய கருத்தினை அறிவிக்குமாறு தமிழ் அறிஞர்கள் சிலருக்கும், தமிழ்ச் சங்கங்கள் சிலவற்றுக்கும் எழுதியிருந்தோம். பெரும்பாலானோர் வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுதல் நன்று என அறிவித்துளர். ஆகவே இனி வைகாசி அனுடத்தையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுமாறு தமிழ்மக்கள் யாவரையும் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாண்டில், திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் ௧௫-ம் நாளாகிய (28—5—53) வியாழக்கிழமையாகும். இந்நாளைத் தமிழ்மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடச் செய்வதற்கும், ஆண்டுதோறும் வரும் திருவள்ளுவர் திருநாளை அரசினர் விடுமுறை நாளாக்குவதற்கும் எங்கள் தமிழ் மறைக்கழகம் முயல்கிறது. இம் முயற்சி நன்கு நிறைவேறுதற்கு இன்றியமையாதனவற்றைச் செய்யுமாறு தமிழர்கள் வாழும் இடங்களிலுள்ள தமிழர்களின் சங்கங்களையும், கலாசாலைகளையும், மடங்களையும், பத்திரிகைகளையும், தமிழறிஞர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இதுபற்றிய வேறு செய்திகளை அறியவும், அறிவிக்கவும் விரும்புவோர் 'தமிழ் மறைக்கழகம், இல,-44, 33-ம் ஒழுங்கை, கொழும்பு-6' எனும் முகவரிக்கெழுதுக.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"—தமிழ் மறை.